| 05 | திரு. என்.கெ எதிரிசிங்க | பணிப்பாளர் RED | தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியங்களில் உயிர்சக்திக்கான (ISO-13065) நிலைத்திருக்கும் தகுநிலை பற்றிய செயற்றிறனை வலுப்படுத்தலிற்கான SIS – SAWTEE கருத்திட்டத்திற்கான முன்கருத்தரங்கும் அதனைத் தொடர்ந்த கூட்டமும் | 2011/05/14 - 2011/05/20 | ஜேர்மனி | சுவீடன் கட்டளைகள் நிறுவகம் |
| 06 | எந்திரி.டி.டி.எ நாமல் | பணிப்பாளர் நாயகம் | சிட்னியில் இடம்பெற்ற Lifes Asia, Spare Internalional Lightnings event மற்றும் Mercury கொள்கை கூட்டம் பற்றிய 3வது கூட்டம் | 2011/06/06 - 2011/06/09 | அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலியா அரசு |
| 07 | திரு.சி.எ.யு தல்பதடோ | கட்டிடக் கலைஞர் | கொரியாவின் விQQான தொழில்நுட்ப பூங்கா பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் | 2011/08/29 - 2011/08/09 | கொரியா | கொரிய புத்தாக்க தொகுதி மன்றம் |
| 08 | திரு.எம்.எ.எஸ் பண்டார | கண்காணிப்பாளர் (மின்னியல்) | தன்னியக்க மின்கல சோதனை பற்றிய நிகழ்ச்சித் திட்டம் | 2011/09/19 - 2011/09/23 | ஜேர்மனி | Digatron Industrie - Electronik GmbH |
| 09 | திரு.கெ.லை.எச்.டி சாந்த | பதில் பணிப்பாளர் AC&Pit | தென் நாடுகளுக்கான டெக்னோ முயலுமையை பற்றிய பயிற்சிப் பட்டறை | 2011/09/26 - 2011/09/30 | மலேசியா | சர்வதேச விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க நிலையம் |
| 10 | திரு.என்.கெ எதிரிசிங்க | பணிப்பாளர் (RED) | முன் கருத்தரங்கும் சர்வதேச கட்டளைகள் அமைப்பாண்மை கூட்டமும் | 2011/10/02 - 2011/10/06 | கென்யா | சுவீடன் கட்டளைகள் நிறுவகம் |
| 11 | எந்திரி.டி.ஆர் புள்டே.. பெரேரா | தவிசாளர் | மாற்றல்களை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழகம் , கைத்தொழிற்துறை கூட்டிணைவு பற்றிய WIPO பிராந்திய முன்னரங்கு | 2011/02/02 - 2011/11/04 | வியட்னாம் | உலக அதிபுலமை சொத்து அமைப்பாண்மை |
| 12 | திரு. ஜெ.எ.எ. ஜயசூரிய | ஆராய்ச்சியாளர் (HOD / E & EMC) | சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற் துறைகளில் சக்தி முகாமைத்துவமும் மற்றும் தூய உற்பத்தி பற்றிய தே.வி.ம. இணையுரிமை | 2011/10.31 – 2011/12/2 | நெதர்லாந்த் | நெதர்லாந்து இணையுரிமை நிகழ்ச்சித் திட்டம் |

| இலக்கம் | அலுவலரின் பெயர் | பதவி | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | கால வரையறை | நாடு | அனுசரனை நிறுவகம் |
|---|---|---|---|---|---|---|
| 13 | திரு. டி.எம். புன்சிபன்டா | முதன்மை ஆராய்ச்சி எந்திரி | காலநிலை மாற்றங்களுக்கு எதிராக பச்சை தாவர வளர்ப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 2011.10.10 - 2011.10.19 | கொரியா | கொரியா சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையம் |
| 14 | திருமதி. என்.டி. இராஜபக்ச | தொழில்நுட்ப உதவியாளர் | திண்ம மென் பொருளை பயன்படுத்தி 3D மாதிரிப் படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 2011.11.16 – 2012.01.14 | இந்தியா | இந்தியா அரசு |
| 15 | திருமதி. என்.பி. குமாரசிங்க | ஆராய்ச்சி எந்திரி | சூரிய சக்தி தொழில்நுட்பமும் அதன் பிரயோகமும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 2011.11.14 – 2011.12.13 | இந்தியா | இந்தியா அரசு |
| 16 | திரு. ஜி.கெ.கெ.எ. டி சில்வா | பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆ,ஆ) | புத்தாக்கத்தில் முகாமைத்துவ திறன் விருத்தி, மற்றும் ஆசிய பிராந்தியத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப மாற்றீடு மற்றும் தொழில்நுட்பவியல் உத்தரவுப் பத்திரம் பற்றிய பிராந்திய பயிற்சி பட்டறை | 2011.11.28 – 2011.12.01 | பிலிப்பைன் | சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் |
| 17 | எந்திரி. எம்.எ.எம். பெனான்டோ | பதில் பணிப்பாளர் (தொ.ச.தி) | அதிபுலமை சொத்து பொருளியல் மற்றும் கொள்கை பற்றிய ஆராய்ச்சி WIPO / UNQSCAP பற்றிய பிராந்திய பயிற்சி பட்டறை | 2011.12.08 – 2011.12.09 | தாய்லாந்து | உலக அதிபுலமை சொத்து அமைப்பாண்மை |
| 18 | திரு. ஜெ.எ.எ. ஜயசூரிய | ஆராய்ச்சியாளர் (HOD / E & EMC) | சூரிய சக்தி பற்றிய சார்க் மாநாடு | 2011.12.20 – 2011.12.22 | மாலைத்தீவு | சார்க் சக்தி நிலையம் |

## 06. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முக்கியமான செயலாற்றுகை விபரங்கள்.

ஆராய்ச்சி அபிவிருத்தி என்ற வகையில் நாட்டில் முதன்மை ஸ்தானத்திலுள்ள இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையானது (தே.எ.ஆ.அ.நி),பல ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதோடு, நாட்டின் பொருளியல் சமூக துறை விருத்திக்கு விலைமதிப்புமிக உள்ளீடுகளையும் வழங்கியுள்ளது. இச்செயற்பாடுகளின் பிரதான விளைவுகளும் பெறுபேறுகளும் புதிய உற்பத்திகளையும் புதிய தொழில்நுட்பங்களையும் உருவாக்கியுள்ளது என்பதுடன், அது நாட்டின் கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளின் உறபத்தித் திறன் மற்றும் வினைத்திறன் என்பனவற்றை மேம்படுத்துவதற்கு மிகவும் உதவியாக அமைந்தன எனலாம். நிலையத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கும் மற்றும் அரசின் அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைவுறவும், இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது வேலையில்லா பிரச்சினை, நிர்மாண பொருட்களின் உயர்விலை, வேறுபட்ட தொழிற்துறைகளில் ஊழியப் பற்றாக்குறை மற்றும் விவசாய மற்றும் பெருந்தோட்ட துறைகளில் சக்தி தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கருத்திட்டங்களின் ஊடாக ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப மாற்றீடு துறைகளில் தன் கவனத்தை செலுத்தி வருகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழ்,மொனராகலை மாவட்டத்தை சேர்ந்த பள்ளிக்கூட மாணவர்களுக்காக இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் செலவுக்குறைச்சலான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நூலக கட்டிடங்களை கட்டுவதற்கான அதிகார பூர்வமான நடவடிக்கைகளில் நிலையம் தொடங்கியுள்ளது. 2011 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெற்ற அதேவேளையில், மொனராகலை மாவட்டத்தில் கட்டப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அதே முறையினை பயன்படுத்தியே , அனுராதபுர மாவட்டத்தினைச் சார்ந்த 27 கிராமிய பள்ளிக்கூடங்களிலும் நூலகங்கள் கட்டப்பட்டது. இந்த முறைகளின் பயனுறுதித் தன்மையை கருத்திற்கொண்டு இலங்கை நிதி அமைச்சின் துணையுடன் சகல மாவட்ட சபைகளிலும் செலவுக் குறைச்சலான கட்டிட நிர்மாண தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக, கல்வி மற்றும் சுகாதார மாகாண அமைச்சுக்களின் கீழ் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையில் தேயிலையை உலர வைக்க விறகுத்துண்டுகளை எரிபொருள் சக்தியாக பயன்படுத்தலானது ஒரு பெரிய சாதனையாகும். இந்த முறைமையானது விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் இத் தொழில்நுட்ப மாற்றீடானது தற்பொழுது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத் தொழில் நுட்ப மாற்றீட்டை தேயிலை உலரவைத்தல் கைத்தொழிற் துறைக்கு பயன்படுத்துவதன் மூலம் பெரிய அளவில் சக்தியை சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் ஈடுபட்ட பிரதான விடயங்களை கீழ்வருமாறு தொகுக்கலாம்.**

1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள்.
2. பிரபல்யப்படுத்துகை மற்றும் தொழில்நுட்பவியல் விருத்திகள்.
3. தொழில்நுட்ப மாற்றீடு செயற்பாடுகள்.
4. முன்னோடி கருத்திட்டங்களை நிர்மாணித்தலும் நிறுவுதலும்.
5. நிர்மாண கருத்திட்டங்கள்.
6. உசாத்துணை சேவைகள்.
7. உள்ளகமைப்பு விருத்திகள்.

### 6.1. ஆராய்ச்சி மற்றும் விருத்திகள்.

கைத்தொழிற்துறைக்கு புதுப்பிக்கத்தக்க சக்தியின் பிரயோகம், சூழல் மாசுறல், நிர்மாண கைத்தொழிற் துறைக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய குறைந்த செலவினத்திலான கட்டிட நிர்மாண திரவியங்கள், விவசாய மற்றும் உணவு செயன்முறை கைத்தொழிற்துறையில் உயர் உற்பத்தி திறன் போன்ற நாட்டின் பிரதான துறைகளின் பிரதான தேவைப்பாடுகளை கருத்திக்கொண்டு, அத்துறைகளில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளை விருத்தி செய்யும் நோக்குடன் அநேகமான ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளின் நிலையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. நிலையத்தினால் முன்னெடுத்துச் செய்யப்பட்ட சில முக்கிய ஆராய்ச்சி அபிவிருத்தி கருத்திட்டங்கள் வருமாறு

I. **கருத்திட்டம்** - கம்பளயில் டீன் சைட் தேயிலை தொழிற்சாலையில் விறகுச் சில்லுகளை தேயிலை உலர வைக்க பயன்படுத்தல்.

**கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் -** கம்பளையில் உள்ள டீன் சைட் தேயிலை தொழிற்சாலையில் தேயிலையை உலர வைப்பதற்கு விறகுத் துண்டுகளை சில்லுகளாக்க ஒரு முன்னோடி அலகொன்று நிலையத்தினால் தாபிக்கப்படல்.

**கருத்திட்ட விளைவுகளிலுருந்து அனுகூலங்கள்.**

- ஆகக்குறைந்தது 20%மான எரிவிறகினை சேமித்தல் சாத்தியமாகும்.
- தேயிலை உற்பத்தியை தொடர்ந்தும் நீடித்து நிலைத்திருக்கச் செய்யும், தேயிலை உலர வைப்பு செயன்முறைக்கு கிளிரிசீடியா போன்ற குறுஞ் சுழற்சி தாவரத்திலிருந்து விறகுச்சில்லுகளை எரிபொருளாக பயன்படுத்துதல்.
- தற்பொழுதுள்ள நடப்பில் உள்ள உலைக்கு எதுவித சீர்திருத்தமைவுகளும் தேவையில்லை.
- செயற்பாட்டு முறையானது எந்த சந்தர்ப்பத்திலும் பாரம்பரிய முறைக்கு மாற்றப்படலாம்.
- திருப்பி செலுத்தப்பட வேண்டிய காலவரையறை 02 வருடங்கள் ஆகும்.
- விறகினை எரிபொருளாக பயன்படுத்தும் உலையை உடைய தேயிலை ஆலைகளில் கூறப்பட்ட முறை பயன்படுத்தப்படின் தேசிய அளவில் அதிகளவு சக்தியை சேமிக்கலாம்.





II. **கருத்திட்டம்** - உயிர்த்திணிவால் செயற்படும் கிரய பயனுறுதி மிகு உலரி ஒன்றின் விருத்தி.



**குறிக்கோள்** - கைத்தொழிற்துறை பிரயோகங்களுக்கு ஏற்ற வகையில் உயிர்த்திணிவை எரி பொருளாகக் கொண்ட புதிதான கிரய பயனுறுதி மிகு உலரி ஒன்றினை விருத்தி செய்தலும் பரிசோதித்தலும்.

**கருத்திட்ட விளைவுகளிலுருந்து அனுகூலங்கள்.**

- உயிர்த்திணிவு எரிபொருள் மூலகமாக பயன் படுத்தப்பட்ட வகையில் ஒரு வெப்ப பிறப்பாக்கள் முறைமை உள்ளடக்கம்.
- சுழற்சிக்குரிய பெயர்ச்சி காரணமாக வெப்பவளியுடன் அ அதிக வினைத்திறமையுடன் நடக்கின்றது.
- வெப்பக்காற்றினை வெளியேற்றும் வெப்பக்குழல் வாயுவினை பயன்படுத்தி நேரடி வெப்பமேற்றல் செய்வதினால் ஆகக்குறைந்தளவு விறகு, எரிபொருளாக நுகரப்படுதல்.
- உலர வைக்கும் போது அதில் இருக்கக் கூடிய நுண்துகள்களை அகற்றும் பொருட்டு உலரியானது சல்லடையாகவும் செயற்படுகிறது.

III. **கருத்திட்டம்:** வீட்டு பிரயோகங்களுக்கான உயிர் வாயு முறைமை.



**குறிக்கோள்கள்:** வீட்டுப்பாவனைகளுக்காக மனித கழிவுடன் சமையலறை கழிவுகளும் இணைந்து இணை பதனழிவு ஆக்குவதற்கான உயிர்த்திணிவு பதனழிவு கருவியின் செயலாற்றுகையை சோதித்தல்.

**கருத்திட்ட விளைவுகளிலுருந்து அனுகூலங்கள்.**
வீட்டுப்பாவனைக்கு பயன்படுத்தப்படும் L.P வாயுவின் அளவை 80%இனால் குறைக்கலாம்.

IV. **கருத்திட்டம்:** வலு பிறப்பாக்கற் முறைமையினை அடிப்படையாகக் கொண்ட 1000 கி.வாட்ஸ் வாயுவாக்கியின் மின்வலு கம்பிச் சட்டக இணைப்பு



**குறிக்கோள்கள்**: மின்வலு பிறப்பாக்கற் முறைமையினை அடிப்படையாகக் கொண்ட 1000 கி.வாட்ஸ் வாயுவாக்கியின் மின்வலு கம்பிச்சட்டக இணைப்பு.

**திட்டத்தின் பிரதான விளைவானது உயிர்த்திணிவின் மூலம் மின்வலுவினை பிறப்பாக்கல்.**

V. **கருத்திட்டம்:** மிளகு அறுவடை இயந்திரம் ஒன்றினை விருத்தி செய்தல்.

**குறிக்கோள்கள்:** மிளகுத் தண்டிலிருந்து மிளகினை பிரித்தெடுப்பதற்கான ஒரு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.



**கருத்திட்ட விளைவுகளிலுருந்து அனுகூலங்கள்.**

- உயர்தரமான விளைபொருள்.
- அதிக விளைப்பொருட்களை பெற்றுக் கொள்ளல்.
- உயர் உற்பத்தி திறன்.
  (தற்பொழுது இந்த இயந்திரத்தின் கள பரீட்சார்த்தமானது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது)

VI. **கருத்திட்டம்**: வீட்டுப்பாவனையின் விரய நீர் பேணப்படுவதற்கு இடை மட்டமான மேற்பரப்பினை உடைய ஈரநிலங்களை நிர்மாணித்தலிற்கான சாத்தியக் கூறுகளை இனங்காணலிற்கான முன்னோடி ஆய்வு.



**கருத்திட்ட விளைவுகளிலிருந்து அநு கூலங்கள்.**

வீட்டுப்பாவனையின் போது ஏற்படக் கூடிய விரய நீரை பேணுவதற்கு இந்த முறைமை பயன்படுத்தப்படும். இது மக்களுக்கு ஒரு சுகாதாரமான சூழலினை தருவதுடன் உயர் சனத் தொகை மிகு பிரதேசங்களுக்கு இத் தொழில் நுட்பம் மிகுந்த பயனள்ளதாக இருக்கும்.

VII. **கருத்திட்டம்** - விதையிலிருந்து எண்ணெய் பிரித்தெடுப்பு இயந்திரம்.

**குறிக்கோள்கள் -** சுதேச மருத்துவ கைத்தொழிற் துறையிலிருந்தான கேள்வியை திருப்திபடுத்துவதற்காக பாரம்பரிய விதைகளிலிருந்தும் இலைகளிலிருந்தும் எண்ணெயை பிரித்தெடுக்கும் இயந்திரம்.

**கருத்திட்ட விளைவுகளிலுருந்து அனுகூலங்கள்.**

கைத்தொழிற் துறையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்தல்.

VII. **கருத்திட்டம்** - நெல் வயல்களில் வரப்பினை கட்டும் இயந்திரம்.

**குறிக்கோள்கள்** - நெல் வயல்களில் வரப்பினை கட்டும் போது ஏற்படக் கூடிய ஊழியச் செலவினத்தை குறைக்க.

**கருத்திட்ட விளைவுகளிலுருந்து நன்மைகள்.**

இது நெற் பயிற்செய்கை வேளாண்மையில் ஊழியச் செலவினத்தை குறைக்கும்.

**IX. கருத்திட்டம்** - களையகற்றல் இயந்திர மொன்றின் விருத்தி



**குறிக்கோள்கள் -** நெற் பயிற்செய்கை வேளாண்மையில் களையகற்றல செயற்பாட்டில் ஊழியச் செலவினத்தை குறைத்தல்

### 6.2. விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்துதல்.



தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்து வதற்கு, இந்நிலையமானது அரச மற்றும் அரச சாரா அமைப்பாண்மைகளின் உதவியுடன் நாடெங்கிலும் விழிப்புணர்ச்சி திட்டங்களை முன்னெடுத்து உள்ளது. கூறப்பட்ட இச் செயற்பாடுகளின்
பிரதான பகுதியானது 'திவிநெகும' தேசத்திற்கு மகுடம் போன்ற அரசின் பிரதான நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதி அமைச்சின் நிதி ஆணைக்குழு இவற்றின் கோரிக்கைக்கு இணங்க தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது, 2011 ஆம் ஆண்டில் அரச மற்றும் மாகாண சபை அலுவலர்களுக்கு நிலையத்தின் தொழில்நுட்பங்கள் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் செய்கை முறை விளக்கமளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது. இவை எதிர்காலத்தில் கட்டிட நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது பயனுடையதாக இருக்கும்.

### உத்தரவுப்பத்திரங்கள்.



நாட்டின் தேவையை பூர்த்தி செய்வதற்கு இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரங்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என இனங்காணப்பட்டுள்ளது. கிரய பயனுறுதி மிகுந்த முறையில் (குறைந்த செலவில்) வீடுகள் நிர்மாணம் செய்யப்படுவதில் உள்ள கேள்வியை பூரண நிறைவு செய்வதற்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது 2011 ஆம் ஆண்டில் எந்திரவியலாளர்கள், வரைஞர்கள் மற்றும் மேசன்களுக்கு மூன்று வகையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை
ஒழுங்கமைப்பு செய்துள்ளது.

### கரவெடியில் விசேட கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.



வட மாகாணத்தில் கரவெடி எனுமிடத்தில் உள்ள விதாதா வள நிலையத்தில் கரவெடியினைச் சோர்ந்த 30 பேருக்கு களத்திலே யே பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோளானது தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்பங்களை
பயன்படுத்தலாகும்.

கடந்த 30 வருடங்களில் தீவிரவாதிகளின் தாக்குதலின் காரணமாக சேதமடைந்த கட்டிடங்களை கிரய பயனுறுதி தொழில்நுட்ப முறையில் நிர்மாணித்தலும் திருத்தலும்.

**தேசிய எந்திரவியல் ஆராய்சி அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள்.**

***I. தனித்து இயங்கக் கூடிய கிராமிய நீரியல் திட்டம் பற்றிய சார்க் மாநாடு.***

இந்த நிகழ்ச்சித் திட்டமானது தேசிய எந்திரவியல் ஆராய்ச்சிஅபிவிருத்தி நிலையத்தினால் 2011, மே மாதம் 3–5 ஆம் திகதி வரையில் சார்க் செயலகத்தினதும் மற்றும் இலங்கை தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கூட்டிணைவுடனும் நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த எட்டு பங்கு பெறுநர்களும் மற்றும் உள்ளக பங்கு பெறுநர்கள் ஆறு பேரும் இந்தப் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர். முதல் இரண்டு நாட்களும் இலங்கையைச் சேர்ந்த ஒன்பது வள ஆளணியினரால் கிராமிய நீரியல் திட்டத்தின் வேறுபட்ட தொழில்நுட்பவியல் விடயங்களைபற்றி அறிமுகப்படுத்துகை நடாத்துவதில் அவதானத்தை செலுத்தினர். இக்காலகட்டத்தில் பங்கு பெறுநர்கள் தத்தமது நாட்டின் கிராமிய நீரியல் திட்டம் பற்றி தத்தமது அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டனர்.




பயிற்சிப் பட்டறையின் இறுதி நாளின் போது அவர்கள் இரத்தினபுரியில் செயற்படுத்துகை அளவிலான கிராமிய நீரியல் திட்டத்திற்கும் விஜயம் செய்தனர்.

II. **கிரய பயனுறுதி மிகு கட்டிட தொழில்நுட்பம் பற்றிய IOR – ARC பிராந்திய பயிற்சிப் பட்டறை**

கிரய பயனுறுதி மிகு கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் பற்றி தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது இரு நாட்களை கொண்ட பயிற்சிப் பட்டறையை நடாத்தியதில் 1வது நாளன்று இலங்கையைச் சேர்ந்த 06 வள ஆளணியினர் கிரய பயனுறுதி மிகு கட்டிட நிர்மாணத்தின் வேறுபட்ட பரப்பெல்லைகளை பற்றி அறிமுகப்படுத்துகை நடாத்திய அதே வேளையில் பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் நாள் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்ப பூங்காவில் இந்த கிரய பயனுறுதி மிகு தொழில்
நுட்பம் செய்கை முறை விளக்கமளிப்பாக பங்கு பெறுநர்களுக்காக காட்டப்பட்டது. கிரய பயனுறுதி தொழில்நுட்பம் பற்றி அறிவினையும் அனுபவத்தையும் நிலையமானது பங்கு பெறுநர்களுடன் பகிர்ந்து கொண்டது.




**III. வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கு நிகழ்ச்சித்திட்டம்.**

ஆசிய மற்றும் பசுபிற்கான ஐக்கிய தேசிய பொருளியல் மற்றும் சமூக ஆணைக்குழுவின் தொழில்நுட்ப மாற்றீட்டிற்கான ஆசிய மற்றும் பசுபிக் நிலையத்துடன் இணைந்து நிதியீடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்,

இலங்கை வர்த்தக சபை மற்றும் இலங்கை தேசிய துப்புரவாக்கள் உற்பத்தி நிலையம் என்பன ஒருங்கிணைந்து ஒழுங்கமைப்பு செய்தது.

**நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்.**
புதுப்பிக்கத்தக்க சக்தி தொழில்நுட்பங்களினை சேர்த்துக் கொள்ளல் மற்றும் அதன் பாவனை என்பனவற்றை மேம்படுத்துவதற்கான வியாபர பங்குடமையை வளரத்தல்.

**கருத்திட்டத்தின் விளைவுப்பயன்.**
தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் நிபுணர்கள் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவை பகிர்ந்து கொள்வதற்கு இயலும் தன்மை கொண்டவர்களாகின்றனர்.

**தேயிலை கைத்தொழிற்துறைக்கு கருத்தரங்கு.**
தேயிலை உலரவைப்பதற்கு விறகுச் சில்லுகளை உட்புகுத்தி அதனை எரிபொருளாக பயன்படுத்துதல் பற்றிய முறையுடன் சக்தி வினைத்திறன் வாய்ப்புகள் எனும் தலைப்பின் கீழ் ஒரு நாள் பயிற்சிப் பட்டறையானது 116 பங்கு பெறுநர்களுடன் இடம் பெற்றது.

**விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை அரச மற்றும் தனியார் துறையினைச் சார்ந்த பிரதான அலுவலர்களுக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் நடாத்தியது. நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான விளைவுகள் வருமாறு.

1. தொடர்புடைய தொழில்நுட்பத்திற்கு பொருத்தமான நபரை இனங்காணல்.

2. ஒரு பிரதேசத்தின் தேவைப்பாடு மற்றும் அப்பிரதேசத்தில் உளதாயிருக்கின்ற வளங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அப்பிரதேசத்திற்கு தேவைப்படும் தொழில்நுட்பத்தை இனங்காணல்.

| **திகதி** | **நடாத்தப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | **பங்கு பெறுநர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2011/03/10 | மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளைச் சார்ந்த சட்ட வரைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக கிரய பயனுறுதி கட்டிட நிர்மாணத்தை பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். (அரைநாள் நிகழ்ச்சித்திட்டம்) | 45 |
| 2011/07/04 | வயம்ப மாகாணத்தை சேர்ந்த அலுவலர்களுக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்பங்களை பற்றி விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 200 |
| 2011/08/05 | ஊவா மாகாணத்தை சேர்ந்த அலுவலர்களுக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்பங்களை பற்றி விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 125 |
| 2011/09/21 | மாகாண சபைகளின் பிரதான செயலகங்கள் மற்றும் பிரதி பிரதான செயலகங்களுக்காக, தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் கிரய பயனுறுதி கட்டிட நிர்மாணத்தை பற்றி விழிப்புணர்ச்சி செயற்பாடு. | 30 |
| 2011/09/27 | தென் மாகாண அலுவலர்களுக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்பங்கள் பற்றி விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள். | 102 |
| 2011/12/12 | மாகாணங்களில் உள்ள தீர்மானங்கள் எடுப்போர் சகலருக்காகவும் நிதி ஆணைக்குழுவின் கூட்டிணைவுடன விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம். | |
| 2011/12/15 | பவகலயில் உள்ள விதாத வள நிலையத்தை சார்ந்தோருக்கு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம். | 54 |

**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

வேறுபட்ட அமைப்பாண்மைகளிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

| **திகதி** | **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **பங்கு பெறுநர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2011/08/11 | ஹொரபொத்துவில உள்ள பிரதேச செயலகத்தில் கொங்கிரீட்டிலான கதவு, யன்னல் உற்பத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தேசத்திற்கு மகுடம் 2012 நிகழ்ச்சித்திட்டம்) | 49 |
| 2011/09/09 | வரைஞர்களுக்காக கிரய பயனுறுதி கட்டிட நிர்மாண பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 36 |
| 2011/09/16 | வரைஞர்களுக்காக கிரய பயனுறுதி கட்டிட நிர்மாண பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 30 |
| 2011/09/27 | வரைஞர்களுக்காக கிரய பயனுறுதி கட்டிட நிர்மாண பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 56 |
| 2011/11/17 | எந்திரவியலாளருக்கான கிரய பயனுறுதி கட்டிட நிர்மாண பயிற்சித் திட்டம். | 06 |

**கண்காட்சிகள்.**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது, 2011ஆம் ஆண்டில் நாட்டில் வேறுபட்ட இடங்களில் கீழ் குறிப்பிட்ட கண்காட்சிகளில் கலந்து கொண்டது. இந்நிலையமானது பொதுமக்களிடமிருந்து இக்கண்காட்சி தொடர்பில் சிறந்த பின்னூட்டல் அபிப்பிராயங்களை பெற்றுக் கொண்டது.

| **திகதி** | **கண்காட்சியின் பெயரும் இடமும்** |
|---|---|
| 2011/02/04 - 10 | புத்தளயில் "தேசத்திற்கு மகுடம் - 2011" கண்காட்சி |
| 2011/04/01 - 03 | கொழும்பில் உள்ள விஹார மகாதேவி பூங்காவில் "இதுலகவருன" கண்காட்சி. விவசாய திணைக்களம் பங்கு பற்றிய இக்கண்காட்சி தொழில்நுட்பவியல் சந்தைப்படுத்துகை திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. |
| 2011/04/10 - 12 | கொழும்பிலுள்ள பண்டார நாயக்க ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர் - 2011 கண்காட்சி. |
| 2011/06/24 - 26 | கொழும்பிலுள்ள பண்டார நாயக்க ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் இன்கோ – 2011 கண்காட்சி. |
| 2011/07/07 - 08 | கண்காட்சிப் பொருட்களாவன நுகேகொடயில் உள் / பிட்டிபான மற்றும் நீர்கொழும்பிலுள்ள சாந்த மேரி கல்லூரிக்கு வழங்கப்பட்டது. |
| 2011/07/08 - 11 | கண்காட்சி -2011 மாகாண கைத்தொழிற்துறை கண்காட்சி – கிழக்கு மாகாணம், திருகோணமலை. |
| 2011/08/11 - 14 | சக்தி முகாமைத்துவ நிலையம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய திணைக்களங்களின் பங்கு பெறலுடன் நடைபெற்ற விதுக கண்காட்சி. |
| 2011/09/07 - 09 | யாழ்ப்பாணத்திலுள்ள விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விவசாய கண்காட்சி -2011. |
| 2011/09/13 | இன்போ ருவன்புர -2011, கஹவத்தையில் உள்ள ருவன்புர தேசியக் கல்லூாயீல் இடம் பெற்ற கல்வியியல் மற்றும் வர்த்தகக் கண்காட்சி. |
| 2011/10/07 - 09 | டெக்னோ -2011 கண்காட்சி. |
| 2011/10/24 - 25 | தொழில்நுட்பவியல் சந்தையிடம் - பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம். |
| 2011/12/17 | ஹிக்கடுவயில் உள்ள சீனிகம தேவாலயத்தில் கண்காட்சி. |
| 2011/12/25 - 31 | "50 விது அரனலு 2011" கல்வியில் கண்காட்சியும் வர்த்தக சந்தையும். |

**தங்கப்பதக்கங்கள் - 2011 டெக்னோ கண்காட்சி.**
டெக்னோ 2011 கண்காட்சியில் புத்தாக்கமும் ஆக்கத்திறனும் மிகுந்ததொரு சாவடியினை காட்சிப்படுத்தியமைக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கு ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.






**‘திவிநெகும’ நிகழ்ச்சித்திட்டம்.**

பொருளியல் அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கு தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது. குடிசைக் கைத்தொழில் திட்டத்தின் கீழ் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுக்கு அதிக வரவேற்வு காணப்பட்டது. இவ்வாறு திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தில் வரவேற்பை பெற்ற தொழில்நுட்பங்களை மாற்றீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. உ+ம் : தூய தேங்காயென்றை பிரித்தெடுப்பு கருவி.



**6.3. தொழில்நுட்ப மாற்றீடு செயற்பாடுகள்.**

பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்க கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பங்கள் மாற்றீடு செய்யப்பட்டன.

- மரவள்ளிக்கிழங்கு அழகாக வெட்டும் கருவி/ மரக்கறிகளை அழகாக வெட்டும் கருவி.
- கைத்தொழிற் துறைக்கான மர வாயு ஸ்டவ்.

**மரவள்ளிக் கிழங்கை அழகாக வெட்டும் கருவி.**

2011ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கருவியின் துணையுடன் பழங்கள், மரக்கறிகள், மரவள்ளிக் கிழங்குகளை அழகாக வெட்ட முடியும். இது உற்பத்தியின் தரத்தையும் பெறுமானத்தையும் மேம்படுத்தும்.



**கைத்தொழில் மரவாயு ஸ்டவ்.**

உயிர் திணிவு சக்தியுடன் இயங்கும் கைத்தொழிற் துறைக்கான மர வாயு ஸ்டவ் வானது உணவுப் பொருட்களை சிக்கனமான முறையில் சமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.



**காப்புரிமை செயற்பாடுகள்.**

தேசிய எந்திரவியல் அராய்ச்சி அபிவிரத்தி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்டு நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களுக்கு 2011 ஆம் ஆண்டில் காப்புரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. தொடர்ச்சியாக மிளகு விதைகளை வேறுபடுத்தும் சிறிய அளவிலான கருவி
2. தேயிலை கைத்தொழிற்துறைக்கு பயன்படுத்தப்படும் அளவில் மிகச் சிறிய விறகுத்துண்டுக்களுக்கான நெகிழ்வுத் தன்மையுடைய ஸ்கூரு பொருத்தல் முறைமை

**முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் பிரசுரிப்புகளும்**

2011 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன.

| ஆய்வுக் கட்டுரை | எழுதியவர் | முன்வைக்கப்பட்டது | பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| காகிதாயிகள் தகன முறைமையின் போது விடுவிக்கப்பட்ட மொத்த துகள்கள் மற்றும் ச்சுத்தன்மையான வாயுவினை கண்காணித்தல். | கெ.டி. ஜயசிங்க | இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவகம் | இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவகத்தின் சஞ்சிகை தொகுதி XXXXIV இலக்கம் 04 2011,ஒக்டோபர் |
| வலு பிறப்பாக்கலிற்காக Fludized bed gassihire இலிருந்தான ஆக்கி வாயுவின் தரத்தை மேம்படுத்தல் | இ.எ.என்.கெ எதிரிசிங்க | விதுல்கா - இலங்கையின் நீடித்து நிலைத்திருக்கும் சக்தி அதிகார சபையினால் நடாத்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்தரங்கு | |
| Fludized bed gassihire இலிருந்து ஆக்கி வாயுவை துப்புரவாக்கல். | இ.எ.என்.கெ எதிரிசிங்க | 2011, ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவகத்தில் இடம் பெற்ற 105வது வருடாந்த பருவக் கூட்டத் தொடர் | |

**தொழில்நுட்பவியல் சந்தை இடம்.**

வருட காலப்பகுதியில் நிலையம் கலந்து கொண்ட பிரதான நடவடிக்கைகளில் ஒன்று, தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற தொழில்நுட்வியல் சந்தையிடம் ஆகும். இந்தக்கண்காட்சியில் கலந்து கொண்டதன் மூலம் நிலையமானது வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக் கொண்டதுடன் நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட வேறுபட்ட தொழில்நுட்பங்களாவன கண்காட்சியின் போது செய்கை முறை விளக்கமளிப்பாகவும் காட்டப்பட்டுள்ளது.



**நிதி ஆணைக்குழுவின் கூட்டிணைவுடன் மாகாணங்களின் தீர்மானங்களை எடுப்போருக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் - 2011/12/12**



இந்த நிகழ்ச்சித் திட்டமானது நிதி ஆணைக்குழுவின் உறுதுணையுடன் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது பிரதான செயலகங்கள் உள்ளடங்களாக 9 மாகாணங்களிலிருந்து 59 உயர்மட்ட அதிகாரிகளும் மற்றும் ஒவ்வொரு மாகாணங்களிலிருந்து ஏனைய சிரே\ட அதிகாரிகளும் கலந்து காண்டனர். 2011/12/12 இல் இடம் பெற்ற பயிற்சிப் பட்டறையில் கீழ் குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

i) ஒவ்வொரு மாகாணமும் முன்னோடி கருத்திட்டம் என்ற அடிப்படையில் நிலையத்தின் கிரய பயனுறுதி முறையில் இரு கட்டிட நிர்மாணங்களையேறும் ஏற்றல் வேண்டும்.

ii) இந்த முன்னோடி கருத்திட்டமானது பொது மக்களுக்கு செய்கை முறை விளக்கமளிப்பாக இலகுவாக காட்டக்கூடிய விதத்தில் அதற்கு ஏற்புடைய இடத்தில் அமைதல் வேண்டும்.

iii) ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டிட திரவியங்களை விநியோகிப்போர் ஆகியோருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிர்மாண பணியினை கண்காணிப்பதற்கு தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் ஆதரவு பெறப்படல் வேண்டும்.

iv) நிலையத்தின் கட்டிட நிர்மாண தொழில்நுட்பத்தை பொது மக்களிடையே பரப்புதல் நிமித்தம், ஒப்பந்தக்காரர்கள், திறன்மிகு தொழிலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோரை பயிற்றுவிப்பதற்கு நிலையத்தின் உதவி பெறப்படல் வேண்டும்.

**நடாத்தப்பட்ட புதினப்பத்திரிகை ஆக்கங்களும் மின்னணுவியல் ஊடகங்களும்**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகளை பொது மக்களிடையே பரப்புவதற்காகவும் அதே நேரத்தில் அச்செயற்பாடுகள் பற்றிய அறிவினை பொது மக்களுக்கு வழங்குவதற்காகவும் 2011 ஆம் வருட காலப்பகுதியில் நிலையமானது மின்னணுவியல் ஊடகங்கள் மற்றும் புதினப்பத்திரிக்கைகள் என்பனவற்றை பயன்படுத்தின.

**6.4. முன்னோடி கருத்திட்டங்களை நிர்மாணித்தலும் நிறுவுதலும்**

**I. நடை பாலமொன்றினை நிர்மாணித்தல்**

மொனராகலை மாவட்டத்தில் பொல்லேபட எனும் கிராமத்தில் நடைபாலமொன்று நிர்மாணிக்கப்படல். பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் செயற்றிட்டத்தின் நன்மைகள்



- குறுகிய காலப்பகுதிக்குள் தீர்மானிக்கக்கூடியதாக இருந்தமை
- பராமரிப்பு தேவைப்பாடுகள் குறைவாகும். அதனையும் கிராமத்தை சேர்ந்தவர்களாயே செய்தல் முடியும்.
- 25 குடும்பங்களுக்கு அதன் மூலம் போக்குவரத்து வசதி வழங்கப்பட்டது.

**II. நீர்த்தாங்கியொன்று நிர்மானிக்கப்படல்**

5000 லீட்டர் நீர்தாங்கியொன்று பண்டாரகல, வெஹராகல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டது. தன்மன்வில, வெஹரகல எனும் பிரதேசத்தில் முன்கட்டுருவாக்க பெரோ சீமெந்து தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, 5000 லீட்டர் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டது.

**கருத்திட்டத்தின் நன்மைகள்.**



- குறைந்த செலவினம்
- குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டமை
- கிரயம் - இலங்கை ரூபாயில் 35,000.00

### 6.5. நிர்மாண செயற்றிட்டங்கள்

**கிரய பயனுறுதி தொழில்நுட்பத்தின் பயன்பாட்டுடன் நிர்மாண செயற்பாடுகள்**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்டும் தொழில் நுட்பங்களை செய்கை முறை விளக்கமளிப்பாக காட்டல் பொருட்டு, சில முக்கிய நிர்மாண செயற்றிட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவை நாட்டின் வேறுபட்ட பிரதேசங்களில் செய்கை முறை விளக்கமளிப்பாக காட்டப்படது.

**செயற்றிட்டம் இல: 1**

பொயாகமயில் உள்ள இராணுவ முகாமில் மலசலக்கூடத்திலிருந்து திரவ விரயத்தை அகற்றும் பொருட்டு முறைமை ஒன்று நிர்மாணிக்கப்பட்டது,

**இயலளவு:** $20m^3$

**செயற்றிட்டத்தின் நன்மைகள்**

இராணுவ முகாமின் சமையலறையில், பிறப்பிக்கப்பட்ட உயிர்வாயு சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது



**செயற்றிட்டம் இல: II**

**யாழ்பாணத்தில் கரவெட்டியில் விதாதா கட்டிடமொன்றினை நிர்மாணித்தல்**

கரவெட்டி பிரதேச செயலகத்திற்காக புதிய விதாதா கட்டிடமானது யாழ்பாணத்திலுள்ள கரவெட்டியில் நிர்மாணிக்கப்பட்டது.

**பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்**



- முன்வார்புரு செய்யப்பட்ட நிரல்கள்.
- கொங்கிரிட்டில் ஆன கதவுகளும் யன்னல் சட்டங்களும்
- தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட கொங்கிரீட் பாளமுறைமை

மொத்த கிரயம் 5.2 மில்லியன்

காலவரையறை - 03 மாதங்கள்

**செயற்றிட்ட இலக்கம் III**

பொலனறுவை வைத்தியசாலையில் தாதிகளுக்கு விடுதிகளை கட்டல்.

நிலப்பரப்பெல்லை : 11000

சதுர அடி கிரயம் : 27 மில்லியன்

**பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்**

- சீமேந்து, மண்ணினால் ஆன கற்கள், பூச்சு அவசியமில்லை
- கொங்கிரீட்டில் ஆன கதவு மற்றும் யன்னல் சட்டகம்



**6.6. ஒப்பந்த சேவைகள்**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் வழங்கப்படும் உசாவுத்துணை சேவைகளாவன, பிரதானமாக நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களை அடிப்படையாக கொண்டு அமைந்ததாகவே இருக்கும். முக்கியமாக குறிப்பிட்டு சொல்ல வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் நிர்மாணத்தில் எழுகின்ற சில விசேடமான பிரச்சினைகளுக்கு நிர்மாண விடயங்களுடன் தொடர்புடைய ஏனைய நபர்களிடம் பெறப்படாத தீர்வுகளாவன, தாங்கக் கூடியளவு செலவுத் தொகையில் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் வழங்கப்படுகிறது. நிலையத்தின் உசாவுத்துணை சேவைகளாவன, நிர்மாண கைத்தொழிற்துறை, விவசாய கைத்தொழிற்துறை, பின் அறுவடை தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க சக்தி, சக்தி முகாமைத்துவம் மற்றும் சூழலியல் மாசுறல் ஆகியனவாகும்.

உசாவுத்துணை சேவைகளாவன வேறுபட்ட பரப்பெல்லைகளில் முன்னெடுக்கப்படுகின்றது.

(i) சிவில் எந்திரவியல்

(ii) சக்தி மற்றும் சூழலியல் எந்திரவியல்

(iii) புதுப்பிக்கத்தக்க சக்தி

(iv) மின்னியல், மின்னணுவியல் மற்றும் இயந்திரவணுவியல்

(v) வடிவமைப்பு, கட்டுருவாக்கம், உசாவுத்துணை.

**I. கட்டிட எந்திரவியல்**

**பயனுறுதி தொழில்நுட்பமுறையில் கட்டிட நிர்மாணத்திற்கான உசாவுத்துணை சேவைகள்.**

அ) கிரய பயனுறுதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மொனராகல மாவட்டதில் 22 பள்ளிக் கூடங்களுக்கு நூலக கட்டிடங்களினை நிர்மாணித்தல்.



**விசேட பண்பியற்கூறுகள்** - தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் அத்திவாரம், முன் அழுத்தம் கொடுக்கப்பட்ட நிரல்கள் முன் அழுத்தம் கொடுக்கப்பட்ட கொங்கிரீட் தூலாக்கப்பட்டு, சீமெந்து மண் கற்கள்.

ஆ) பிரதேச செயலகத்தில் சீமேந்து மண் கற்கள் செய்கை முறை விளக்கமளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்திய பின்னர், பிரதேச செயலகத்திலிருந்து சில கருத்திட்டங்களாவன 2012 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்ற வேளையில் பிரேரிக்கப்பட்டது.

இ) **விதாதா நிலையத்திற்கு உசாவுத்துணை சேவைகள்.**

விதாதா வள நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு, தயாரிக்கப்பட வேண்டிய திட்டங்கள், மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு என்பவை தொடர்பில் நிலையத்தின் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் படி சிவில் எந்திரவியல் திணைக்களம் தனது உசாவுத்துணையை இவ்விடயம் தொடர்பில் வழங்கியுள்ளது இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள விதாதா வள நிலையங்களாவன பெல்மதுள, கஹவத்த, வலிகாபொல, ஒப்பநாயக, எஹலியபொட, இம்பல்பே, நிவிதிகல, ஹெலிஏல, கிரில்லே.



இச்செயற்றிட்டத்தின் மொத்த பெறுமானம் - 75 மில்லியன் ஆகும் கட்டிட வேலை நடந்துக கொண்டிருக்கின்றது.

**II. சக்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ நிலையம்.**

சக்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ நிலையமானது கீழ் குறிப்பிடப்பட்ட பரப்பெல்லைகளில் தனது உசாவுத்துணை சேவைகளை வழங்குகிறது.

- சக்தி கணக்காய்வு
- ஆய்வ கூட பரிசோதனை
- கைத்தொழிற்துறையாளர்களுக்கு எழக்கூடிய சூழலியற் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கல்
- கொதிகலன் செயலாற்றுகையும் மற்றும் புளு வாயு பகுப்பாய்வும்
- சக்தி வினைத்திறமையுடன் தொடர்புடைய வடிவமைப்புகள்
- கைத்தொழில் செயன்முறை கண்காணிப்பும் உசாவுத்துணையும்

2011ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சேவைகளின் மொத்த பெறுமானம் ரூபாய் 6,465,605/- ஆகும்.

**சூழலியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கல்.**

சேன்ட் வொசிங் பிளான்ட்(மணல் கழுவும் இயந்திரம்) அவர்களுடைய பிரதான சூழலியல் பிரச்சினைகளை தீர்வு செய்து தரும்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது. அவர்களின் சூழலியல் பிரச்சினைகள் வருமாறு.



i) அப்பிரதேசங்களில் நில நீரை மாசுறச் செய்யும் வகையில் சேற்றுநீர் ஏற்பட்டுள்ளது. இது அப்பிரதேசத்து மக்களின் சுகாதாரத்தையும் பாதிக்கின்றது.

ii) கழுவிய பின்னர் சேகரிக்கப்பட்ட சேறானது அடுத்துள்ள நிலத்திற்கு பிரச்சினையை ஏற்படுத்துகிறது.

**தீர்வுகள்.**

சேற்று நீரை ஒரு வடிப்பியின் ஊடாக வடித்து மீண்டும் பயன்படுத்துவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் முறையை நிலையம் வடிவமைத்துள்ளது. மற்றும் சேறானது அகழப்பட்ட ஒரு குழியினை மீண்டும் நிரப்ப பயன்படுத்தப்பட்டது.

**செயற்றிட்டத்தின் நன்மைகள்.**



1. பயன்படுத்தப்பட்ட நீர் மீண்டும் செயன்முறைக்கே ஒரு கிரமமான முறையின் மீள் சுழற்சி செய்யப்படல்.
2. ஆவியாகுதல் தவிர பாவித்த நீரின் பெரும் பங்கினை மீண்டும் இந்த முறைமைக்கே மீள் சுழற்சி செய்யக் கூடியதாக இருப்பதால் நில நீரை அகழ்ந்தெடுத்தலை குறைக்கலாம்.
3. இந்த முறைமையின் கீழ் ஒரு கொங்கிரீட் பாளத்தினால் முற்று முழுதாக நிலம் பிரிக்கப்படுவதினால் நில நீர் மாசடையாது.
4. உலர வைக்கப்பட்ட சேற்றினை நிலம் நிரப்பல் செயற்பாட்டிற்கு பயன்படுத்தலாம்.

## III. புதுப்பிக்கத்தக்க சக்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உசாவுத்துணை சேவைகள்.

- சாம்பராக்கியின் உயரப் புகைப்போக்கியினை திருத்துதல்.

குருநாகலை வைத்தியசாலையில் உள்ளதும் 45அடி உயரமும் 1.5அடி விட்டமும் உடைய உயரப்புகைப்போக்கியின் நிலையம் திருத்தியது.

- இராகமை வைத்தியசாலையில் உள்ள உயரப் புகைப்பொக்கியின் LPG எரிதல் முறைமையினை திருத்துதல். உயரப் புகைப் போக்கியின் தன்னியக்கமாக இயங்கக் கூடிய கைத்தொழிற்துறை வகையினைச் சார்ந்த எரிப்பான் (burner) முற்று முழுதாக திருத்தப்பட்டது.

## IV. மின்னியல், மின்னணுவியல் மற்றும் இயந்திரவணுவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைகள்.

திணைக்களமானது கீழ்வரும் வசதிகளை உள்ளடக்கும் வகையில் உசாவுத்துணை சேவைகளை வழங்கியது.

- நிகழ்ச்சித்திட்ட தருக்க கட்டுப்படுத்திகளின் அடிப்படைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
- இரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சோதனை தரங்கணிப்பும் ஆய்வு கூட சேவையும்.**

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆய்வு கூட சேவைகளையும மற்றும் ஏனைய சோதனை சேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு கைத்தொழிற்துறைக்கு சேவைகளை வழங்கியுள்ளது.

2011ஆம் ஆண்டு பூரணப்படுத்தப்பட்ட ஆய்வு கூட சேவைகளின் மொத்த பெறுமதி ரூபாய் 5,841,024/- ஆகும்.

## V. வடிவமைப்பு கட்டுருவாக்கம் மற்றும் உசாவுத்துணை திணைக்களத்தினால் கைத்தொழிற்துறைக்கு வழங்கப்படுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட உசாவுத்துணை சேவைகள்.

- இறப்பர் கைத்தொழிற்துறைக்கு புதிய அச்சுக்கள் மற்றும் சாயங்களை வடிவமைத்தல்.

- வடிவமைப்புகளையும் வரைவுப் படங்களையும் உற்பத்தி செய்தல்.

- வரை ஜனசெவ நிறுவகத்திற்கு CAD/CAM பற்றி தொழில்நுட்ப அறிவை வழங்குதல், அச்சுகள் உருவாக்குவதற்கு உதவியாக இருத்தல்.

வடிவமைப்பு கட்டுருவாக்கம் மற்றும் உசாவுத்துணை திணைக்களத்தினால் கைத்தொழிற்துறைக்கு வழங்கப்பட்ட மொத்த சேவைகளின் பெறுமானம் ரூபாய் 1,629,634/- ஆகும்.

### 6.7. உள்ளகமைப்பு விருத்திகள்.



**மலசலக்கூட தொகுதிகளை நிர்மாணித்தல்.**
நிறுவகத்தின் சுகாதார வசதியினை மேம்படுத்தும் முகமாக ஆறு மலசலகூடங்களுக்கான மலசலகூட தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தரைப்பரப்பளவு – 700சதுர அடி.

**பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்.**
சீமேந்து மணல் ,கற்கள் உள்ளடங்கலாக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் கிரய பயனுறுதி தொழில்நுட்பம்.

# 07. சமூக நலன்புரி மத நடவடிக்கைகள்.

## 7.1 இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் நலன்புரிச் சங்கம்.

இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் நலன்புரிச் சங்கமானது கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை 2011ஆம் ஆண்டில் ஒழுங்கமைத்துள்ளது.

- இந்த நிலையத்தின் தோற்றுவிப்பு தவிசாளர்களில் ஒருவரான மறைந்த வித்யாஜயோதி கலாநிதி டி.என்.எ குலசிங்க அவர்களினை நினைவுக் கூறும் விதமாக 2011/10/26 ஆம் திகதியன்று நடைப்பெற்ற இரத்த தான நடவடிக்கை.
- மறைந்த டி.எ இராஜபக்ஷ அவர்களை நினைவுக் கூறும் விதமாக இலங்கை எல்லே சங்கத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு முல்லைத் தீவு மாவட்டத்தில் 2011/09/05 ஆம் திகதியிலிருந்து 08 நாட்கள் வரை இடம் பெற்ற எல்லே விளையாட்டுப் போட்டி.

### 7.2 மதச் சங்கங்கள்.

இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் பௌத்த சங்கம், கத்தோலிக்க சங்கம் என இரு சங்கங்கள் தாபிக்கப்பட்டன. நிலையத்தின் பதவியணி அலுவலர்களின் எண்ணங்கள் மற்றும் ஆன்மீக உணர்வு என்பனவற்றின் நலன்கருதி பல செயற்பாடுகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் இந்த இரு சங்கங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த இரு சங்கங்களை பொறுத்த வரையிலும் முனைப்பாக தெரியக் கூடிய பண்பியற்கூறு யாதெனில், நிலையத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த இரு சங்கங்களில் ஏதாவது ஒன்றிலாவது உறுப்பினராகுவதற்கு மனவிருப்பத்துடன் இருக்கின்றனர்.

2011ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளாவன சங்கங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

#### 7.2.1 பௌத்த சங்க செயற்பாடுகள்.

- 2011 ஜனவரி மாதம் 03ஆம் திகதி பிரித் கூறல் நிகழ்ச்சி ஒன்று ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
- ஜாலெயில் உள்ள வெலிகாம பிடியில் உள்ள ஜயவர்தன சிறார் மனையில் தண்ணீர் தாங்கிக்கு அருகில் உள்ள இடத்தை துப்புரவு செய்யும் சிரமதான பணியானது 2011/04/09 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.
- ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி 2600 இன் ஞாபகார்த்தமாக ஜா எலயில் உள்ள சாசனாரக்சக பல மண்டல பதிவாளர் வண. போகொட பியானந்தவினால் 2011.05.12 ஆம் தகதி சொற்பொழிவு ஆற்றப்பட்டது.
- 2011 ஆம் ஆண்டு மேமாத வெசாக் தினத்தின் ஞாபகார்த்தமாக இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் பதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு நீர்த் தாங்கியினை கையளித்தல்.
- 2011/06/14 ஆம் திகதி பொசொன் தினத்தின் ஞாபகார்த்தமாக வணக்கத்துக்குரிய நாவல தஹம்மனன்டாவினால் ஒரு சொற்பொழிவு ஆற்றப்படுவதற்கு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
- 2011 ஆகஸ்ட் மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் பொலன்னறுவை செல்வதற்கு ஒரு யாத்திரை ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
- இந்நிலையத்தின் தோற்றுவிப்பு தவிசாளர்களில் ஒருவரான மறைந்த வித்யாஜயோதி கலாநிதி எ.என்.எஸ் குலசிங்க அவர்களின் ஞாபகார்த்தமாக 2011/10/26 ஆம் திகதியன்று பௌத்த ஒளிபரப்பு அலைகளில் ஒரு சொற்பொழிவு ஆற்றப்படுவதற்கு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
- 2011/12/16 ஆம் திகதியன்று ஜாஎலயில் உள்ள வெலிகாம பிடியில் உள்ள ஜயவர்த்தன சிறார் மனையில் ஒரு தானம் வழங்கலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 7.2.3 கத்தோலிக்க சங்க நடவடிக்கைகள்.

- வழமையான கத்தோலிக்க சடங்கானது கத்தோலிக்க சங்கத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதுடன் அது 2011/12/22 ஆம் திகதியன்று சீதுவயில் உள்ள சுபுவத்த அரனவின் வணக்கத்துக்குரிய பாதர் டெரல் கூங்கேனவினால் நடாத்தப்பட்டது.

## 08. கணக்கியற் கொள்கைகள்.

### 01. பொது கணக்கியற் கொள்கை

பொது

2011.12.31 இல் உள்ளவாறான ஐந்தொகையும் அதனுடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களும் வரலாற்றுக் கிரய அடிப்படையில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட, கணக்கியற் கொள்கைகளுக்கு அமைவுறவும் மற்றும் இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டங்களுக்கு ஒத்திசைவாக மாறாது நிலுவைக் கருதுகோள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

### 02. சொத்துக்களும் அவற்றின் பெறுமான அடிப்படையும் நிலையான சொத்துக்கள்.

நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான நிதியமானது திறைசேரியினால் வழங்கப்பட்டது. நிலையான சொத்துக்களின் முழு மொத்த பெறுமான மிகுதியினை நாம் தீர்மானிக்கும் பொழுது சொத்துக்களின் சுங்கக் கட்டளைகள், கிரயம், காப்புறுதி, கப்பல் கேள்வு, தளையகற்றல் கட்டணம், போக்குவரத்து கட்டணம் மற்றும் சொத்தினை இந்த நிலைக்கு கொண்டு வருதலிற்கு செலவிடப்பட்ட உள்ளூர் கட்டணம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. சொத்துக்களாவன கீழ் வரும் வீதத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது.

| | % |
|---|---|
| கட்டிடங்கள் | 2.5 |
| அலுவலக உபகரணங்கள் | 15 |
| கருவிகள் | 15 |
| செய்கை முறை விளக்கமளிப்பு உருப்படிகள் | 15 |
| கணணிகள் | 33.33 |
| வாகனங்கள் | 15 |
| தளபாடமும் பொருத்துகளும் | 10 |
| ஆதனம், இயந்திரம் ஆய்வு கூட கருவிகள் | 15 |
| நூலக புத்தகங்கள் | 05 |
| உள்ளகமைப்பு | 15 |

★ நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு நிதியமானது பிரதானமாக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டது.

2011.01.21 எனும் திகதியிடப்பட்டதும் 2011 – எனும் இலக்கத்தை கொண்டதுமான சபைக் கூட்டத்தின் பந்தி இலக்கம் 3.2 இற்கு அமைவுற கட்டிடங்கள் மற்றும் உள்ளக அமைப்புகளை மீள் பெறுமானம் செய்வதற்கு சபை அநுமதியை வழங்கியுள்ளது. மீள் பெறுமான மதிப்பீடானது 2007.12.31 இல் செய்யப்பட்டது.

கட்டிடங்கள் மற்றும் உள்ளகமைப்புகளை மீள் பெறுமானமிடலானது இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டம் 18 இற்கு அமைவுற பூரணப்படுத்தப்பட்டதுடன் சீராக்கங்கள் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2010 ஆம் ஆண்டில் தவிர்க்கப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களை நாம் மீள் பெறுமானம் செய்துள்ளோம்.

இலக்கங்கள் ரூபாயில்

| சொத்துக்களும் கட்டிடங்களும் | 2007.12.31 இல் மொத்த கிரயம் | 2007.12.31 இல் திரட்டப்பட்ட பெ. தேய்வு | 2007.12.31 இல் குறைத்து எழுதப்பட்ட மிகுதி | 2007.12.31 இல் மீள் பெறுமான தொகை | மீள் பெறுமானம் ஒதுக்கீடு மிகை / நட்டம் |
|---|---|---|---|---|---|
| மாதிரி கேட்போர் கூடம் | | | | 165,002.00 | 165,002.00 |
| மின் சக்தி பிறப்பாக்கற் அறை<br>மின் சக்தி பிறப்பாக்கிற்கான கட்டிடம்<br>தயார்நிலை மின் பிறப்பாக்கிற்கான கட்டிடம் | | | | 990,000.00 | 990,000.00 |
| APH கட்டிடம் | 231,239.20 | | | | 231,239.20 |
| ஒளி மண்டல மானியினை மீண்டும் பூச்சிடல் | 6,900,886.24 | 5,383,221.95 | 1,517,664.29 | 2,000,000.00 | 482,335.71 |
| 2011 ஆம் ஆண்டில் மொத்த மீள் பெறுமானம் அதிகரிக்கப்பட்டது. | | | | | 1,868,576.91 |

இதன் பெறுபேறாக மீள் பெறுமான ஒதுக்கீடானது ரூபாய் 350,060,917.20 ஆக காட்டப்பட்டுள்ளது.

வருட காலப்பகுதியில் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 155 இன் கீழ் ஒரு காரும் ஒரு வேனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு வாகனங்களின் கிரயமானது கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களினை கருத்தில் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனங்களாவன வரை. டொயாட்டா லங்கா நிறுவகத்தின் ஊடாக இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகதிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இலக்கங்கள் ரூபாயில்

| வாகன இலக்கம் | WP KR 5435 | WP NB 1631 | மொத்தம் |
|---|---|---|---|
| திறை சேரியினால் வழங்கப்பட்ட இரு வாகனங்களின் கிரயம் | 6,750,000.00 | 9,100,000.00 | 15,850,000.00 |
| காப்புறுதி. | 92,491.72 | 65,054.17 | 157,545.89 |
| உத்தரவுப் பத்திரம் | 3,410.00 | 4,538.00 | 7,948.00 |
| மொத்தம் | 6,845,901.72 | 9,169,592.17 | 16,015,493.89 |

★ நிலையத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட காப்புரிமை மற்றும் வியாபார குறியீடு என்பது ஐந்தொகையில் தனிப்பட்ட முறையில் காப்புரிமை மற்றும் வியாபார குறியீடு என்ற அடிப்படையில் காட்டப்பட்டுள்ளது.

## 03. இருப்புப் பட்டியல்

**பெறுமான அடிப்படை**

| | |
|---|---|
| மூலப்பொருட்களின் இருப்பு | - கிரயம் இல்லது தேறிய காசாக்கக் கூடிய பெறுமதி, இந்த இரண்டு பெறுமதிகளில் முதல் வந்தது முதல் வெளியேறும் என்ற கிரய முறையினை பயன்படுத்தி இரண்டு பெறுமதிகளில் குறைவான பெறுமதியினை கணக்கிற்கு எடுத்தல் |
| முடிவுற்ற உற்பத்திகளும் நடைமுறை சேவையும் | - கட்டிட வேலைகள் சம்மந்தமாக நடைமுறை வேலையின் பெறுமதியானது நேரடி திரவியங்கள் , நேரடி ஊழியம் மற்றும் 100% தொழிற்சாலை செலவினங்கள் என்பன கருத்தில் கொள்ளப்பட்ட பின்பே மதிப்பீடு செய்யப்படும். |

## 04. நிர்மாண ஒப்பந்தங்கள்

- இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களை பொது மக்களுக்கு பிரபல்யப்படுத்துவதற்கான ஒரு பயனுறுதி மிகு கருவி என்ற அடிப்படையில் பொதுத்துறைக்கான நிர்மாண வேலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- அத்தகைய நிர்மாண ஒப்பந்தங்களின் பங்களிப்பு / நட்டம் என்பன,விலை விவரப்பட்டியல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கருத்திட்டம் பூரணப்படுத்திய பிறகு கணிப்பீடு செய்யப்படும்.
- பதவியணி சம்பளங்கள் மற்றும் தொழிற்சாலை மேந்தலைகள் என்பன விதிக்கப்பட்ட பின்பு நிர்மாண ஒப்பந்தங்களின் நடைமுறை வேலை கணிப்பீடு செய்யப்பட்டன.

## 05. ஓய்வூதிய நன்மைகள்.

விதிக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவுற ஓய்வூதிய நன்மைகளாவன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சேமலாபநிதிக்கு நிறுவனத்தின் பங்களிப்பு 15% மாக இருக்கும் அதே வேளையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்பு 3% ஆகும்.

பணிக்கொடை ஏற்பாடானது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக் கொடை சட்டத்திற்கு அமைவுற தயாரிக்கப்படுகின்றது, இதன் அடிப்படையில், நிலையத்தில் சேவைக்கு சேர்ந்த ஒரு வருடத்தில் இருந்து ஊழியருக்கு பணிக் கொடை ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீடானது திறை சேரியினால் நிதியீடு செய்யப்படும். ஒதுக்கீடானது பின்வறுமாறு கணிப்பீடு செய்யப்படும்
(கடைசியாக பெற்றுக் கொண்ட அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைப் படி) X ½ X பூரணப்படுத்தப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை.

## 06. தற்காலிக அழைப்பு வைப்புகள்

ICAMS கருத்திட்டத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட் நிதியமானது இலங்கை வங்கியில் அரச நிறுவக தற்காலிக மிகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பேணப்படுகின்றது.

வாடிக்கையாளரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்களாவன, அந்த முற்பணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட தேவையானது ஆரம்பிக்கப்படும் வரை, தற்காலிக அழைப்பு வைப்புகளாக வங்கியில் பேணப்படும் இதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ஏனைய வருமானமாக காட்டப்படும்

## 07. அரச மானியம்.

நடப்பு மற்றும் மூலதனத்திற்கான அரச மானியமானது தனித்தனியாக காட்டப்படும் பிரதான வருமான மூலகமான நடப்பு மானியமானது வருமான செலவின கூற்றில் வரவு வைக்கப்பட்ட அதே வேளையில் மூலதன செலவினத்திற்கு கிடைக்கப் பெற்ற மானியமானது, திரட்டப்பட்ட நிதியக் கணக்கில் நிலையான சொத்துக்களின் ஆக்கக் கூறுகளுக்கான சீராக்கங்களுடன் பதியப்பட்டது. அரசிடம் கிடைக்கப் பெற்ற மூலதன மானியமானது நடப்பு அல்லாத பரிப்புகளின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக நடப்பு அல்லா பரிப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 08. வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள்.

கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுகைகளாவன அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடுகளை கருத்திற் கொண்டு தேறிய காசாக்கக் கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு பதியப்பட்டுள்ளது. 5 வருடங்களுக்கும் மேலதிகமாக கடன்களுக்கு அதன் பெறுமதியில் 100% மும் ஏனைய கடன்களுக்கு அதன் பெறுமதியில் 5% மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அறவிடமுடியாத சில குறித்துரைக்கப்பட்ட கடன்களாவன சான்றுகளின் அடிப்படையில் பதிவழிப்பு
செய்யப்பட்டுள்ளது.

## 09. ஒதுக்கீடுகள்.

கடந்த ஒரு நிகழ்வின் காரணமாக (சட்டம் அல்லது உற்பத்தி) அதன் நடப்பு காலத்தில் கடப்பாடு ஒன்றினை எதிர் நோக்கின் அதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும். அந்நிகழ்விற்கான கடப்பாடு குறித்து ஏற்படக் கூடிய செலவினம் அல்லது பொருளியல் நன்மைகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு
அதற்கேற்ப ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

## 10. கடன் கொடுத்தோர்.

நிலையத்தினால் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் சந்தர்பங்களில் வியாபார கடன்பட்டோர்
இனங்காணப்படுவர்.

## 11. நிகழத்தக்க பொறுப்புகள்.

1942 ஆம் ஆண்டின் தொழிற்சாலை கட்டளைச் சட்டம் 45 இலுள்ள ஒதுக்கீடுகளுக்கும், 1934 ஆம் ஆண்டின் தொழிலாளர் நஷ்டஈட்டு கட்டளைச் சட்ட இலக்கம் 19 இற்கும் மற்றும் தாபன விதிக் கோவை அத்தியாயம் X 11 இல் வாசக இலக்கம்09 என்பனவற்றிக்கு அமைவுற புதுப்பிக்கத்தக்க சக்தி திணைக்களத்தை சேர்ந்த வார்ப்பகரான காயப்பட்ட ஊழியர் திரு. எம்.பி.டபிள்யு.பி. குலசேகர வின் விபரங்களை 2011.12.03 ஆம் திகதி ஒரு தீர்மானத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நஷ்டஈட்டு ஆணையாளருக்கு அறிவித்தோம் இவ்விடயம் குறித்து கிட்டத்தட்ட ரூபாய் 500,000.00 தண்டமாக செலுத்தப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். சில்வேரா, வத்தளையில் உள்ள தொழிலாளர் நியாயச்சபையில் இலக்கம் - 31/194/2005 எனும் வழக்கினை பதிவு செய்திருந்தார் இந்த வழக்கானது நிராகரிப்பு செய்யும் படி தீர்ப்பு வந்திருந்த போதிலும் இத்தீர்ப்பிற்கு எதிராக இவ்வழக்கானது கம்பஹாவில் உள்ள மேல் நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் இலக்கம் - 44/2010.

## 12. வருமானம்.

நிறுவகத்தின் பிரதான வருமான மூலகம் திறை சேரியினால் வழங்கப்படும் நடப்பு மானியமும் ஆராய்ச்சி மானியமும் ஆகும்.

## 13. ஏனைய வருமானம்.

ஏனைய வருமானங்கள் எனப்படும் பொழுது அதில், பூரணப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மாற்றீடு கருத்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட தேறிய வருமானம், அழைப்பு வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம், திரவ சேதங்கள், உடன்படிக்கை வருமானம், கடன்களின் மீதான வட்டி, மீளளிக்கப்படாத வைப்புகள், வழங்குனர்களின் பதிவுகள், சில்லறை வருமானம், சேதப்பட்ட இருப்புகளை விற்பதால் கிடைக்கும் வருமானம், சொத்து விற்பனையின் மூலம் வருமானம் மற்றும் நிலுவை கருது கோளை அடிப்படையாக கொண்ட மேந்தலை அறவீடுகள் என்பன உள்ளடக்கப்படும் 2011.07.01 ஆம் திகதியிலிருந்து மேந்தலை அறவீடுகள் வீதத்தினை 100% இலிருந்து 35% மாக குறைக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

## 14. பிற்போடப்பட்ட வருமானம்.

அரச நிதியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்விலிருந்து பிற்போடப்பட்ட வருமானம் பெறப்பட்டுள்ளது.

## 15. செலவினம்.

செலவிடப்பட்ட செலவினம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட உருப்படியின் மூலம் பெறப்பட்ட வருமானம் இவற்றிக்கு இடையிலான நேரடி தொடர்புகளின் அடிப்படையில் செலவினங்களாவன வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிலையத்தை கொண்டு நடாத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் மற்றும் சொத்து ஆதனம் உபகரணம் என்பவற்றின் மீதான பெறுமானத் தேய்வும் செலவினத்தை மிஞ்சிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. பேணுகை வேலைகளுக்கு ஊழியம் மற்றும் மேந்தலை செலவுகளை விதிப்பதில்லை என முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

## 16. ஊழியர்களிடமிருந்தான போக்குவரத்து வருமானம்.

2011.09.28 ஆம் திகதியிடப்பட்டதும் 2011 – 09 எனும் இலக்கத்தை கொண்ட சபைக் கூட்டத்தின் 6.1 எனும் இலக்கத்தை கொண்ட சபைத் தீர்மானத்திற்கு அமைவுற, MM மட்ட வகுதிக்கு கீழ் அடங்கும்

ஊழியர்களிடமிருந்து அறவிட்ட போக்குவரத்து கட்டணத்தை அறவிடாது இருப்பதற்கு சபை உறுப்பினர் அநுமதித்தனர், இதற்கு காரணம் இவ்விடயத்துடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைவுற நிறைவேற்றுனர் இல்லாத பதவியணியினர், குழு போக்குவரத்துக்கு உரித்துடையவர் அல்லர் என குறிப்பிட்ட சுற்றறிக்கையில் தரப்பட்டமையே ஆகும்.

## 17. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.

ஆராய்ச்சி அபிவிருத்திற்கான கணக்கியற் கொள்கையானது பிரதானமாக திறைசேரியினால் நிதியீடு செய்யப்பட்டது. வெளி வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் செலவினத்திற்றுகு எதிராக அறுதியீடு செய்யப்பட்டது.

ஆராய்ச்சி கருத்திட்டங்களின் கிரயத்தை கணிப்பீடு செய்யும் போது நேரடி திரவியம், ஊழியம், மேந்தலைகள் என்பன கருத்தில் கொள்ளப்படும். 2011.07.01 ஆம் திகதியிலிருந்து மேந்தலை வீதமானது 100% இலிருந்து 35%மாக குறைக்கப்பட்டுள்ளது.

## 09. கணக்குகளுக்கான குறிப்புகள்.

2011. டிசம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளுக்கான குறிப்புகள்.

இலக்கங்கள் ரூபாயில்

### 1. அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு

| வாடிக்கையாளர் | கடன்பட்டோர் மிகுதி ரூபாயில் | விண்ணப்பிக்கப்பட்ட வீதம் | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு |
|---|---|---|---|
| **குறைத்து எழுதப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 100% அ.மு.கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.** | | | |
| வரை. ஏக்சரீஸ் நெட்வர்க் | 197,625.00 | 100% | 197,625.00 |
| ஹிரியாலா | 4,466,423.22 | 100% | 4,466,423.22 |
| DFCC வங்கி | 45,717.53 | 100% | 45,717.53 |
| பத்தும்பர பிரதேச சபை | 221,513.00 | 100% | 221,513.00 |
| தோட்டடத்துறை மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் | 214,810.00 | 100% | 214,810.00 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 210,320.35 | 100% | 210,320.35 |
| NEHRP | 100,000.00 | 100% | 100,000.00 |
| தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 185,183.10 | 100% | 185,183.10 |
| பின் அறுவடை தொழில்நுட்ப நிறுவகம் | 65,251.00 | 100% | 65,251.00 |
| **குறைத்து எழுதப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 5% அ.மு.கடன் ஒதுக்கீடு** | | | |
| ஹிரியாலா | 663,837.15 | 5% | 33,191.86 |
| சுற்றாடல் அமைச்சு | 6,148.45 | 5% | 307.42 |
| வட கொழும்பு போதனா வைத்தியசாலை | 270,786.65 | 5% | 13,539.33 |
| இராணுவ தலைமை விடுதி – தென் பிரிவு | 1,588,098.77 | 5% | 79,404.94 |
| ஸ்ரீலங்கா ஆயர்வேத கூட்டுத்தாபனம் | 107,381.43 | 5% | 5,369.07 |
| வரை.பெல்வத்த பாற்பண்ணை | 371,152.65 | 5% | 18,557.63 |

**குறைத்து எழுதப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் அ.மு.கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டவில்லை.**

| | | |
|---|---|---|
| நிலுவையிலுள்ள வேலை 2011 | 2,575,291.95 | 0% |
| மின்வலு சக்தி அமைச்சு | 4,950.00 | 0% |
| தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு | 108,931.08 | 0% |

## 2. 2011.12.31 இல் உள்ளவாறான முன்னைய வருட சீராக்கல்.

இலக்கங்கள் ரூபாயில்

| காரணம் | நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு பாதிப்பு | நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு பாதிப்பு |
|---|---|---|
| **2.1. N/RED/T7/287/2009**<br><br>**மினுவாங்கொட பிணம் சுடும் கட்டடத்தை திருத்தல்**<br>வரை. லியனகே நிறுவகத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபாய் 76 000/- பணமானது 2009ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் போது கணக்கிலிருந்து விடுபட்டுள்ளது. | (76,000.00) | கடன் கொடுத்தோர் மிகுதியான ரூபாய் 76,000.00 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும் |
| **2.2. N/CVL/ T7/87/2005**<br><br>**கெஸ்பேவையில் விதாதா நிலையத்தை நிர்மாணிப்பதற்கான உசாவுத்துணை.**<br><br>ஒப்பந்த விலை விவரப்பட்டியலில் குறைத்து ஒதுக்கீடு செய்த கல்ஹாரா பில்டர்ஸ் நிறுவகத்திற்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 201,088.00 தொகை 2006ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் போது தவிர்க்கப்பட்டுள்ளது. | (189,364.53) | கடன் கொடுத்தோர் மிகுதியான ரூபாய் 189,364.53இனால் அதிகரிக்கப்படல் வேண்டும் |
| **2.3. பணிக்கொடையில் குறைத்து ஒதுக்கீடு.**<br><br>**2010ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்கு பணிக்கொடை குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** | (327,855.00) | பணிக் கொடைக்கான ஒதுக்கீடு ரூபாய் 327,855.00 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும் |
| நியமனத்திகதியில் திருத்தம் ஏற்பட்டதினால் பணிக்கொடை ஒதுக்கீட்டில் 521,223.00 மாற்றம்ஏற்பட்டது. | (521,223.00) | பணிக் கொடைக்கான ஒதுக்கீடு ரூபாய் 521,223 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும் |

2.1 – சீராக்கலிற்கு பின்பு கருத்திட்டத்தின் நிலை

| சீராக்கலிற்கு பின்பு கருத்திட்டத்தின் நிலை | 2009.12.31இல் உள்ளவாறான கருத்திட்டம் | 2011.12.31இல் உள்ளவாறான கருத்திட்டம் |
|---|---|---|
| வருமானம் | 469,297.13 | 469,298.13 |
| செலவினம் | 357,151.30 | 433,151.30 |
| செலவினத்திற்கு மிகையான வருமானம் | 112,145.83 | 36,146.83 |

2.2 – சீராக்கலிற்கு பின்பு கருத்திட்டத்தின் நிலை.

| சீராக்கலிற்கு பின்பு கருத்திட்டத்தின் நிலை. | 2005 | 2006 | 2007 | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருமானம் | 1,173,329.16 | 495,670.96 | 2,446,018.15 | 4,115,018.27 |
| செலவினம் | 369,937.45 | 475,273.85 | 2,641,755.87 | 3,486,967.17 |
| | 803,391.71 | 20,397.11 | (195,737.72) | 628,051.10 |

2.3 – பணிக்கொடை

| | 2010 ஒதுக்கீடு | சரியான ஒதுக்கீடு | வித்தியாசம் |
|---|---|---|---|
| எ.பி. கமலாநந்த | - | 213,150.00 | 213,150.00 |
| டி.சி.எஸ். சில்வா | 203,470.00 | 222,860.00 | 19,390.00 |
| டி.டி.எ. நாமல் | 683,870.00 | 9,185.00 | 95,315.00 |
| | 887,340.00 | 1,215,195.00 | 327,855.00 |

**2.4.** EMC/TT/2/2008

**நானாவித வாடிக்கையாளர்களுக்கு சுற்றாடல் சேவைகள்**

Rs. 1,955.00 பிடித்து வைத்தல் வரி மற்றும் வரை.யுனிலிவர் ஸ்ரீலங்காவிடமிருந்தும் வரை. மில்கோ நிறுவகத்திடமிருந்தும் வர வேண்டிய ரூபாய் 3,600.00 என்பன அவர்கள் கொடுப்பனவு செய்யத் தவறியதால் அத்தொகைகளாவன, கருத்திட்ட செலவுக்குள் உள்ளடக்கப்பட்டன.

| | 2008.12.31 இல் உள்ளவாரான கருத்திட்டம் | 2011.12.31 இல் உள்ளவாரான கருத்திட்டம் |
|---|---|---|
| வருமானம் | 2,528,136.66 | 2,522,581.66 |
| செலவினம் | 1,624,628.37 | 1,624,628.37 |
| | 903,508.29 | 897,953.29 |

(5,555.00)

கடன் பட்டோர் தொகைகளாவன ரூபாய் 1,955.00 இனால் குறைத்து எழுதப்பட்டது

**2.5.** RED/COM/136/2004

**சலியாபுர உயிர் வாயு சமிபாடாக்கி.**

சலியாபுர உயிர் வாயு சமிபாடாக்கி இற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தற் சேவைகள் முடிவுக்கு கொண்டவரப்பட்டன.

| | 2005/12/31இல் உள்ளவாறான கருத்திட்டம் | 2011/12/31இல் உள்ளவாறான கருத்திட்டம் |
|---|---|---|
| வருமானம் | 1,434,423.00 | 1,434,423.00 |
| செலவினம் | 1,056,267.00 | 1,898,088.10 |
| | 378,156.00 | (463,665.10) |

(841,821.10)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை – தொழில்நுட்ப மாற்றீடானது ரூபாய் 841,821.10 இனால் குறைக்கப்படும்

**2.6.** 2010.01.21ஆம் திகதி இடம் பெற்றதும் 1-2010 எனும் கூட்ட இலக்கத்தை கொண்டதும் பந்தி 4.2 இல் கூறப்பட்டதிற்கும் அமைவுற, நீண்டகாலமாக நிலுவையில் நிற்கும் வாடிக்கையாளரின் முற்பணங்களாவன வருமான கணக்கிற்கு எடுக்கப்பட்டதுடன், பூரணப்படுத்தப்பட்ட பணிகளுக்கான முற்பணங்களாவன வருமானங்களாக கணக்கிற்கு எடுக்கப்படவில்லை.

| வாடிக்கையாளர் | வருடம் | தொகை |
|---|---|---|
| இ.வி. மெரியன் | 2005 | 1,750.00 |
| எச்.எ.பி. டேவிட் | 2005 | 1,312.50 |
| எச். எ. பெரேரா | 2005 | 1,750.00 |
| எக்ரோ டெக்னிகா லிமிடெட் | 2005 | 875.00 |
| டொங் கிங் கன்ஸ் டிரக்ஷன் | 2005 | 875.00 |
| எம். தர்மதாச | 2005 | 21,875.00 |
| எம். தர்மதாச | 2005 | 17,937.50 |
| கைத்தொழில் அபி. அதிகார சபை | 2005 | 15,750.00 |
| எம்.டி.டி.ஐ. ரொஷான் | 2005 | 1,750.00 |
| மஹாவள லய்வ்ஸ்டக் | 2005 | 6,562.50 |
| ஒ.எ.டி. குணரட்ன | 2005 | 1,750.00 |
| ஆர். மாலிகே | 2005 | 1,312.50 |
| ஆர்.வி.ஆர்.எம். ரணசிங்க | 2005 | 1,312.50 |
| ஆர்.டபிள்யு. லியனகே | 2005 | 1,750.00 |
| CECB | 2005 | 393.75 |
| டி.பி. ஜீரசிங்க | 2005 | 350.00 |
| லின்க் என்ஜினியரிங் | 2005 | 6,704.28 |
| ஒல்ட் பசன் எரஸ்ரேன்ட் | 2005 | 7,000.00 |
| வரை. கேட்டலட்ஸ் குளோதிங்க் | 2006 | 205,462.25 |
| பஹர ஹொர வதுன மரண சங்கம் | 2006 | 4,025.00 |
| புத்தி என்டர் பிரய்சஸ் | 2006 | 885.50 |
| விமலசேன | 2006 | 5,685.31 |
| இ.எ. சாந்தினி | 2006 | 1,750.00 |
| டபிள்யு.எ.ஜெ.கெ. சேனசிரி | 2006 | 17,500.00 |
| எ.எம்.பி. பிரியந்த | 2006 | 1,328.25 |
| கெமுனு விஜயசிங்க | 2006 | 7,437.50 |
| பனாகொட இராணுவமுகாம் | 2006 | 1,312.50 |
| ஹேவாகுருபு | 2006 | 21,875.00 |
| எஸ்.எ.சி.எஸ். சுபசிங்க | 2006 | 8,050.00 |

2010 ஆம் வருடத்திற்கு முன்பு ரூபாய் 659,179.77 மற்றும் 2010 ஆம் வருடத்தில் 25,568.7

வாடிக்கையாளர் முற்பண கணக்கானது ரூபாய் 687,748.52 இனால் குறைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| காமல் ஜயவர்தன | 2006 | 4,375.00 |
| அநுராதா பிரின்டர்ஸ் | 2006 | 892.50 |
| சன்ன டி. சொய்சா | 2006 | 17,500.00 |
| டி.என்.எச். அமரசூரிய | 2006 | 17,500.00 |
| சுசித இன்டஸ்ரீஸ் -CME/COM/45/04 | 2006 | 1,500.00 |
| சமர சிங்க வின்ஸ்கிரீன் | 2007 | 10,062.50 |
| அஜித் குமார | 2007 | 218.75 |
| சிலிங்கோ வரை. சிலிங்கோ டெவபடபர்ஸ் | 2007 | 1,811.25 |
| ICDL இன்டஸ்டிரியல் | 2007 | 2,716.88 |
| ICDL இன்டஸ்டிரியல் | 2007 | 452.81 |
| கல்ஹாரா பில்டர்ஸ் | 2007 | 1,750.00 |
| கெ.சி.எம். கன்ஸ்டிரக்சன் | 2007 | 4,980.94 |
| பி.எல்.பி. சேனரட்ன | 2007 | 750.00 |
| ரூம் டு ரீட் ஸ்ரீலங்கா | 2007 | 25,156.25 |
| எ.ஜி.எ.பி. பெரேரா | 2007 | 17,500.00 |
| வரை. ஐ.பி.எஸ்.எம். நிறுவகம் | 2007 | 5,250.00 |
| முத்தையா மற்றும் புத்திரர்கள் | 2007 | 8,750.00 |
| ஆர்.பி.சி. கன்ஸ்டிரக்சன் | 2007 | 3,062.50 |
| எஸ்.டி. புலத்கம | 2007 | 437.50 |
| வரை. யு.எஸ்.எஸ். என்ஜினியரிங் | 2007 | 905.63 |
| கெ.எஸ்.ஜெ. கன்ஸ்டிரக்சன் | 2007 | 11,018.44 |
| பி. குனவர்தன | 2007 | 15,312.50 |
| டெக் மாஸ்டர்ஸ் | 2007 | 13,125.00 |
| கெ.எல். சுரங்கா பீரிஸ் | 2007 | 10,500.00 |
| வரை. ஏமல் பாஸ் இன்டஸ்ரீஸ் | 2007 | 875.00 |
| என்.ஜி.பி. சன்தருவன் | 2007 | 8,050.00 |
| வரை. எஸ்.எல். எக்ஸ்போடர்ஸ் | 2007 | 40,862.50 |
| வாழ்கை தொழில் சார்பியல் பயற்சி அதிகார சபை | 2008 | 32,906.75 |
| எச்.எ. ஜயரட்ன | 2008 | 2,187.50 |
| சாஹின் பெரேரா | 2008 | 4,375.00 |
| வரை. டஜிட் நிறுவகம் | 2009 | 6,918.40 |
| வரை. சில்வர்மெல் கொகோ கூட்டு முயற்சி | 2009 | 7,412.57 |
| சப்ரகமுவ மானாண சபை | 2009 | 2,741.76 |
| எஸ்.எஸ். அபயசேகர | 2009 | 10,000.00<br>659,179.77 |
| கைத்தொழில் அபிவிருத்தி சபை ஒப்சிலோன் | 2010 | 10,193.75 |
| வரை. யுனிலிவர் ஸ்ரீலங்கா | 2010 | 18,375.00 28,568.75 |
| | | 687,748.52 |

| | | |
|---|---|---|
| **2.7. நிலையான சொத்துக்களை மீள் மதிப்பிடல் - கட்டிடங்கள்**<br><br>கட்டிடங்களை மீள் மதிப்பீடு செய்யும் போது 2008/01/01 இலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட கட்டிடங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.<br><br>மாதிரி கேட்போர் கூடம் 165,002.00<br>மின் பிறப்பாக்கற் அறை 990,000.00<br>1,155,002.00<br><br>பெறுமானத் தேய்வு<br>2008 28,875.05<br>2009 28,875.05<br>2010 28,875.05 | 2010 ஆம் ஆணடிற்கு முனபு இலாபமானது 57,750.10 இனால் குறைக்கப்படும் 2010 ஆம் ஆண்டிற்கான இலாபம் 28,875.05<br><br>2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய் 12650.23 இனால் | 2007.2.31 இல் உள்ளவாறான கட்டிடங்களின் மீதியானது 1,155,022.00 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும்<br><br>மீள் பெறுமான ஒதுக்கீடு ரூபாய் 1,155,002.00 இனால் அதிகரிக்கப்படல் வேண்டும்.<br><br>திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வானது ரூபாய் 86,625.15 இனால் அதிகரிக்கப்படும். |

**2.8. அறவிடாத செலவு மிகுதிகள்**

| கடன் கொடுத்தோர் | தொகை | சபை அநுமதியின் தொடர்புக் குறிப்பு | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| ஆர்.ஆர் கன்ஸ்டிரக்சன் | 12,650.23 | சபைக் கூட்டம் இலக்கம் 7, 2011 பிரிவு இலக்கம் 4.6 | C/20/849 பெந்தொட்ட பிரதேச சபையில் கட்டுப்பாட்டு குழு ஒன்றின் நிர்மாணம், மறித்தலானது 2002 ஆம் ஆண்டு இடம் பெற்றது |
| வரை. பென்டன்ஸ் நிறுவகம் | 26,060.00 | | A/12/780 2012 ஆம் ஆண்டில் நலன்புரி கட்டிடம் |
| நிர்மன்தி மரச்சாலை | 4,800.00 | சபைக் கூட்டம் இலக்கம் 8, 2011 பிரிவு இலக்கம்4.6 | 2006 ஆம் ஆண்.டில் பலகைகள் கொள்வனவு |
| கல்ஹாரா பில்டர்ஸ் | 11,723.47 | | 2005 ஆம் ஆண.டில் தனிப்பட்ட முறையில் முற்பணம் எதுவும் வைக்கப்படவில்லை |
| | 55,233.70 | | |

**2.9. ஊக்குவிப்பு கொடுப்பனவில் மேலதிக ஒதுக்கீடு**

2009 ஆம் வருடத்தில் ஊக்குவிப்பு கொடுப்பனவானது மேலதிகமானது ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.10. விவசாய கட்டிடத்தின் பெ. தேய்வு மேலதிகமானது ஒதுக்கீடு செய்யப்படும்.**

இஷானிடயஸிக்கு பெறப்பட வேண்டிய தொகையான ரூபாய் 289,048.98 இனையும் சேர்த்து, 2003 ஆம் வருடத்தில் விவசாய கட்டிடத்தின் கிரயமானது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சபை கூட்டம் 8 – 2011 இல் பிரிவு இலக்கம் 4.6 இல் சபையானது பெறப்பட வேண்டிய தொகையினையும் பதிவழிப்பதற்கு அநுமதியினை வழங்கியது. இதன் பெறுபேறாக பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு குறைக்கப்பட்டதுடன், மீள் பெறுமான ஒதுக்கீடு கணக்கானது ரூபாய் 231,239.20 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**2.11. வாடிக்கையாளர் முற்பணம்**

பைபர் (Fibre) கண்ணாடியிலான கதவு சட்டகங்களை தயாரிப்பதற்கு திரு. அருண பதிராகே கொடுத்த முற்பண கொடுப்பனவு ரூபாய் 5,000 ஆகும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த வாடிக்கையாளர் இப்பணத்தை கோராததினால் இப்பணத்தை வருமானமாக பதிய முகாமைத்துவம் தீர்மானித்தது.

**2.12. பலவித பிளேடுகளை உடைய காற்று இறைப்பிற்கான முன்னோடி இயந்திரம் - R/19/867**

9 – 2011 எனும் இலக்கத்தை கொண்ட சபைக் கூட்டத்தின் பிரிவு 4.8 இற்கு அமைவுற 2002 ஆம் ஆண்டில் பலவித பிளேடுகளை உடைய காற்று இறைப்பியை பரிசீலனை செய்வதற்கு கிடைக்கப் பெற்ற வருமானமானது வருமான க/கு இல் பதியப்பட்டது.

**2.13. வாடகைக்காக பெற்றுக் கொள்ளடப்படும் வாகனங்களுக்கு குறைவாக ஒதுக்கீடு செய்தல்**

2009 ஆம் ஆண்டில் மிலான் டுவர்ஸ் இற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை குறைவக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.14. கடன் கொடுத்தோர் மேலதிகமாக காட்டப்படல்**

2010 ஆம் ஆண்டில் விக்டோரினஸ் எலகரிகல்ஸ் எனும் கடன் கொடுத்தோருக்கு செலுத்தப்பட்ட அறுதியீட்டுத் தொகையானது அதற்கு பதிலாக கட்டிடங்களை பேணல் எனும் க/கு இல் ரூபாய் 1,800 இனால் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**2.15. எம்.ஜெ.என்.கெ. எகொடவெல்லா தரவேண்டிய மிகுதி**

2011.11.12 ஆம் திகதி இடம் பெற்றதும் 2011/11 எனும் இலக்கத்தையுடைய சபைக் கூட்டதினை கொண்டதும் பிரிவு இலக்கம் 5.2 இற்கும் அமைவுற, முன்னைய ஊழியராக திரு. எம்.ஜெ.என்.கெ.

அதிகரிக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய் 26,060.00 இனால் அதிகரிக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய் 4,800.00 இனால் அதிகரிக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய் 2,194.52 இனால் அதிகரிக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய் 57,809.78 இனால் அதிகரிக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு முன்பு இலாபமானது ரூபாய 5000.00 இனால் அதிகரிக்கப்படும்

முற்கொண்டு வந்த இலாப நட்ட க/கு மீதியானது 2010.01.01 இற்கு முன்பு ரூபாய் 32,812.50 இனால் அதிகரிக்கப்படும்

முற்கொண்டு வந்த இலாப நட்ட க/கு மீதியானது 2010.01.01 இற்கு முன்பு ரூபாய் (2,820.00) இனால் குறைக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கான இலாபமானது ரூபாய 1,800.00 இனால் அதிகரிக்கப்படும்

2009 ஆம் வருடத்திற்கான இலாபமானது ரூபாய 6,824.33 இனால் குறைக்கப்படும்

2010 ஆம் வருடத்திற்கு

மறித்தல் பண மிகுதியானது ரூபாய் 12,650.23 இனால் குறைக்கப்படும்

மறித்தல் பண மிகுதியானது ரூபாய் 26,060.00 இனால் குறைக்கப்படும்

கடன் கொடுத்தோர் மிகுதியானது ரூபாய் 4,800.00 இனால் குறைக்கப்படும்

நிலுவைச் செலவினமானது ரூபாய் 2,194.52 இனால் குறைக்கப்படும்.

சில்லறைக் கடன் கொடுத்தோர் ரூபாய் 289,048.9 இனால் குறைக்கப்படுவதுடன் மீள் மதிப்பீடு ஒதுக்கீடானது ரூபாய் 231,239.20 இனால் அதிகரிக்கப்படும்

வாடிக்கையாளர் முற்பண மிகுதியானது ரூபாய் 5,000 இனால் குறைக்கப்படும்

வாடிக்கையாளர் முற்பண மிகுதி ரூபாய் 37,500 இனால் குறைக்கப்படுவதுடன் இறை வரி திணைக்கள ஆணையாளர் நாயக வருமானமானது ரூபாய் 4,687.50 இனால் அதிகரிக்கப்படும்.

நிலுவைக்கட்டணமானது 2,820.00 இனால் அதிகரிக்கப்படும்.

கடன் கொடுத்தோர் மிகுதியானது 1,800 இனால் குறைக்கப்படும்

கடன் கொடுத்தோர் மிகுதியானது 6,824.33 இனால் குறைக்கப்படும்

| | | |
|---|---|---|
| எகொடவெல்லாவிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையை பதிவழிப்பதற்கு அநுமதி பெறப்பட்டது.<br><br>**2.16. சுனாமி கடன் மிகுதி.**<br><br>2008 ஆம் ஆண்டில் பி.எ.கெ.யு. ரொட்டிகோவிடமிருந்து கழிக்கப்பட வேண்டிய தொகையானதும் ஜனவரி மாதத்திற்குரியதுமான தொகையானது சம்பள க/கு இல் பதியப்பட்டு இப்பொழுது திருத்தப்பட்டது.<br><br>**2.17. பதவியணியின் சேர்க்கப்பட்ட காரணத்தினால் கொடுக்கப்பட வேண்டிய சம்பள மிகுதிப் பணம்**<br><br>முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 30 இற்கு அமைவுற பதவியணியனர் சேர்த்துக் கொள்ளப்பட்டு மீள் கட்டமைப்பு செய்யப்பட்டதினால் சம்பள மிகுதிப்பண ஒதுக்கீடு.<br><br>**2.18. சம்பள மறு சீரமைப்பு 2010**<br><br>திரு. எம்.ஜி. அபொன்சுவிற்கு சம்பள மறு சீரமைப்பு செய்யப்படவில்லை. | முன்பு இலாபமானது ரூபாய 1,569.00 இனால் குறைக்கப்படும்<br><br>2010 ஆம் ஆண்டின் நஷ்டமானது ரூபாய் 500,000.00 இனால் அதிகரிக்கப்படும்.<br><br>2010 ஆம் ஆண்டிற்கான இலாபமானது ரூபாய் 6,390.00 இனால் அதிகரிக்கப்படும் | கடன் மிகுதியானது மிகுதியானது 1,569.00 இனால் குறைக்கப்படும்<br><br>கொடுக்கப்பட வேண்டிய சம்பள மிகுதிப்பண ஒதுக்கீடானது 1.5 மில்லியனால் அதிகரிக்கப்படும்.<br><br>ஊழியர் கடன் மிகுதியானது ரூபாய் 6,390 இனால் அதிகரிக்கப்படும் |

| | 1/1/2010 இற்கு முன்பு மிகுதி முன் கொண்டு வந்தது. | 2010 ஆம் ஆண்டிற்கான இலாபம் |
|---|---|---|
| மிகுதி முன் கொண்டு வந்தது. | (109,765,381.89) | (3,902,793.73) |
| 2.1 | (76,000.00) | |
| 2.2 | (201,088.00) | |
| 2.3 | | (849,078.00) |
| 2.4 | | (5,555.00) |
| 2.5 | (841,821.10) | |
| 2.6 | 659,179.77 | 28,568.75 |
| 2.7 | (57,750.10) | (28,875.05) |
| 2.8 | 55,233.70 | |
| 2.9 | 2194.52 | |
| 2.10 | 57,809.78 | |
| 2.11 | 5,000.00 | |
| 2.12 | 32,812.50 | |
| 2.13 | (2,820.00) | |
| 2.14 | | 1,800.00 |
| 2.15 | (6,824.33) | |
| 2.16 | (1,569.00) | |
| 2.17 | | (1,500,000.00) |
| 2.18 | | 6,390.00 |

## 3. அசையாத மற்றும் சேதமடைந்த இருப்புகளுக்கான ஒதுக்கீடு

2011 ஆம் ஆண்டில் அசையாத சொத்துக்களாவன ரூபாய் 1,842,849.57 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 4. சமமாக வைக்கப்பட்ட பணம் நிலையத்தின் பாவனைக்கு இல்லாமை.

ஜா எலயில் உள்ள இலங்கை வங்கியினால் வழங்கப்பட்டதும் ரூபாய் 7,500 பெறுமதியினதும் C/33,73 4579 – 507908 எனும் சான்றிதழ் இலக்கத்தை கொண்டதுமான அழைப்பு வைப்பானது வரை. டொயாட்டா லங்கா நிறுவகத்தின் சார்பில் வங்கி உத்தரவாதமாக வைக்கப்பட்டுள்ளது.

## 10. 2011 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

**இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்**

2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

இலக்கங்கள் ரூபாயில்

| | 2011 | 2010 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | |
| **இயல்பான செயற்பாடுகளிலிருந்து மிகை / நட்டம்** | (24,792,432.34) | (6,249,543.03) |
| **காசு அல்லாத பெயர்ச்சிகள்** | | |
| பெறுமாத் தேய்வு | 72,450,217.17 | 70,081,492.39 |
| அ.மு. கடன் ஒதுக்கீடு அதிகரிப்பு | 430,200.88 | (169,328.92) |
| பொடுக்கப்பட வேண்டியவையில் அதிகரிப்பு (குறைவு) | 3,770,834.24 | (6,061,644.98) |
| இரவல்களில் அதிகரிப்பு (குறைவு) | 14,355,132.80 | (16,543,021.63) |
| ஊழியர் கிரயத்துடன் தொடர்புற்ற வகையில் அதிகரிப்பு (குறைவு) | 4,984,076.00 | 1,389,352.50 |
| சொத்து ஆதனத் கருவி விற்பனையில் (இலாபம்) நட்டம். | 51,999.00 | 1,394.24 |
| ஏனைய நடப்பு சொத்துகளில் (அதிகரிப்பு) குறைவு | 2,265,350.96 | 1,709,431.64 |
| மீள் பெறுமானம் காரணமாக முதலீடுகளில் அதிகரிப்பு. | 482,335.71 | - |
| பெறுகைகளில் (அதிகரிப்பு) குறைவு. | (15,526,354.56) | (5,935,964.36) |
| முன்னைய வருட சீராக்கல் | | (375,642.26) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | 58,471,359.86 | 37,846,525.59 |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல். | | |
| இயந்திரம் கருவிகள் கொள்வனவு. | (64,906,956.18) | 30,302,209.27) |
| இயந்திர விற்பனையில் இலாபம் | (52,000.00) | (4,375.00) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | (64,958,956.18) | (30,306,584.27) |
| நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| மூலதன மானியம் | 82,257,610.40 | 34,308,000.00 |
| ஆராய்ச்சி வருமானத்திற்கு மாற்றீடு | (10,337,000.00) | |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றீடு | (64,883,663.18) | (31,300,437.79) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்.** | 7,036,947.22 | 3,007,562.21 |
| காசும் காசிற்கு சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு / குறைவு. | 549,350.90 | 10,547,503.53 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசிற்கு சமமானவையும் | 79,563,825.31 | 69,016,321.78 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும் | 80,113,176.21 | 79,563,825.31 |

## 11. 2011, டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

**இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்**
**2011, டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2010 | 2011 |
|---|---|---|---|
| சொத்துகள் | | | |
| நடப்புச் சொத்துகள் | | | |
| காசும் காசிற்கு சமனானவையும் | 1 | 80,113,176.21 | 79,563,825.31 |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள் | 2 | 83,503,351.38 | 68,407,197.70 |
| பொருட்பட்டியல் / இருப்பு | 3 | 10,638,407.59 | 12,772,034.40 |
| முற்பண கொடுப்பனவுகள் | 4 | 173,933.14 | 305,657.29 |
| | | 174,428,868.32 | 161,048,714.70 |
| நடப்பு அல்லாத சொத்துகள் | | | |
| சொத்து ஆதனம் கருவிகள் | 5 | 445,408,927.96 | 437,710,830.60 |
| ஏனைய நிதி சொத்துக்கள் | 6 | 51,209,802.44 | 66,451,159.79 |
| | | 496,618,730.40 | 504,161,990.39 |
| மொத்த சொத்துகள் | | 671,047,598.72 | 665,210,705.09 |
| பொறுப்புகளும் நடப்பு பொறுப்புகளும் | | | |
| கொடுக்க வேண்டியவைகள் | 7 | 18,736,247.89 | 16,046,851.04 |
| நிலுவைச் செலவினங்கள் | 8 | 11,245,634.63 | 10,164,197.24 |
| | | 29,981,882.52 | 26,211,048.28 |
| நடபல்லா பொறுப்புகள் | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 9 | 170,212,660.26 | 155,857,527.46 |
| பணிக் கொடை ஏற்பாடு | 10 | 62,717,094.25 | 57,733,018.25 |
| | | 232,929,754.51 | 213,590,545.71 |
| மொத்தப் பொறுப்புகள் | | 262,911,637.03 | 239,801,593.99 |
| மொத்த தேறிய சொத்துகள் | | 408,135,961.69 | 425,409,111.10 |
| தேறிய சொத்துகள் / ஒப்புரவு | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | 11 | 408,135,961.69 | 425,409,111.10 |
| மொத்த தேறிய சொத்துகள் / ஒப்புரவு | | 408,135,961.69 | 425,409,111.10 |

.................................................
எந்திரி. டி.ஆர். புள்ளேபெருமா
தவிசாளர்

......................................
எந்திரி. டி.டி. ஆனந்த நாமல்
பணிப்பாளர் நாயகம்.

......................................
டி.வி.எஸ். பெரேரா
நிதி முகாமையாளர்

## 12. 2011 ஆம் வருடத்திற்குரிய நிதிச் செயலாற்றுகை கூற்று

**இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்**
**2011, டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று**

**இலக்கங்கள் ரூபாயில்**

| | அட்டவணை இலக்கம் | 2011.12.31 | 2011.12.31 மீண்டும் பதியப்பட்டது |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| நடப்பு மானியம் | 1 | 139,687,000.00 | 137,642,000.00 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 2 | 50,528,530.38 | 47,843,459.42 |
| ஏனைய வருமானம் | 3 | 24,098,577.70 | 23,942,329.75 |
| **மொத்த வருமானம்** | | 214,314,108.08 | 209,427,789.17 |
| **செலவினங்கள்** | | | |
| தனி ஆள் வேதனாதிகள் | 4 | 109,268,559.10 | 97,368,082.20 |
| பிரயாணமும் படிகளும் | 5 | 1,039,292.92 | 419,229.63 |
| விநியோகமும் நுகர்வும் | 6 | 9,284,739.75 | 8,802,230.81 |
| பேணல் | 7 | 5,794,479.43 | 9,622,868.14 |
| ஒப்பந்த சேவைகள் | 8 | 16,666,909.25 | 13,808,572.14 |
| ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினங்கள் | 9 | 20,398,056.28 | 13,920,753.65 |
| பெறுமானத் தேய்வு | 10 | 72,450,217.17 | 70,081,492.39 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவினம் | 11 | 4,079,157.46 | 1,487,146.99 |
| நிதிக் கிரயம் | 12 | 125,129.06 | 166,956.25 |
| **மொத்த செலவினம்** | | 239,106,540.42 | 215,677,332.20 |
| **காலப்பகுதிக்கான மிகை / நட்டம்** | | (24,792,432.34) | (6,249,543.03) |

## 13. 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் பற்றிய கூற்று

**இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்**

**2011, டிசம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்கள் / ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் | அரசினால் பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | ஏனைய மூலகங்களிலிருந்து மூலதனம் | மீண்டும் எழுதப்பட்டது மீள் மதிப்பீடு மிகை | திரட்டப்பட்ட மிகை (நட்டம்) | மொத்த தேறிய சொத்துகள் / ஒப்புரவு | 2010.12.31 இல் உள்ளவாறான மீண்டும் எழுதப்பட்ட மிகுதி. |
|---|---|---|---|---|---|---|---|
| 2009.12.31 இல் உள்ளவாறான முன் கொண்டு வந்த மிகுதி | 1,000,000.00 | 36,763,006.92 | 119,985,089.87 | 349,743,581.49 | (110,141,024.15) | 397,350,654.13 | 403,690,371.84 |
| 2010 ஆம் ஆண்டில் பெறப்பட்டவை | | 34,308,000.00 | | | | 34,308,000.00 | 11,940,000.00 |
| மீள் பெறுமான ஒதுக்கீட்டில் அதிகரிப்பு | | | | | | | |
| 2010 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை | | | | | (6,249,543.03) | (6,249,543.03) | (18,279,717.71) |
| பிற்போடப்பட்ட வருமான க/கு மாற்றீடு | | | | | | | |
| 2010.12.31 இல் உள்ளவாறாக மீண்டும் எழுதப்பட்ட மிகுதி. | 1,000,000.00 | 71,071,006.92 | 119,985,089.87 | 349,743,581.49 | (116,390,567.18) | 425,409,111.10 | 397,350,654.13 |
| முன்னைய வருட சீராக்கல் | | | | | | (0.00) | (0.00) |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றீடு செய்யப்பட்ட மூலதன மானியம் | | (64,883,663.18) | | | | (64,883,663.18) | |
| வரு. முற்றீடு செய்யப்பட்ட ஆராய்ச்சி மானியம் | | (10,337,000.00) | | | | (10,337,000.00) | |
| 2011 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன மானியம் | | 82,257,610.40 | | | | 82,257,610.40 | 34,308,000.00 |
| மீள் மதிப்பீடு மிகை / நட்டம் | | | | 482,335.71 | - | 482,335.71 | |
| வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செயலாற்றுகை | | | | | (24,792,432.34) | (24,792,432.34) | (6,249,543.03) |
| 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | 1,000,000.00 | 78,107,954.14 | 119,985,089.87 | 350,225,917.20 | (141,182,999.52) | 408,135,961.69 | 425,409,111.10 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமைஅதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / MyNo. ஈஎல்/எப்/என்ஈஆர்டீ/எப்ஏ/2011
ඔබේ අංකය / உமது இல / No.
දිනය / திகதி / Date 2012 யூன் 08

தலைவர்,
இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்.

**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு, 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (I) ஆம் உப பிரிவு மற்றும் 1974 ஓகஸ்ட் 14 ஆந் திகதிய 124/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2012 மார்ச் 28 ஆந் திகதி நிலையத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72,பொல்துவவீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887220
ෆැක්ස්අංකය / பக்ஸ் இல / Fax No. 2887221
ඉලෙක්ට්‍රොනික්තැපැල් / ஈ- nkapy;oaggov@sltnet.lk / E-mail.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நியமம் 09 இன் பிரகாரம் 03 மாதத்திற்கு மேற்பட்ட நிலையான வைப்புக்கள் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியமம் 16 இன் படி ஊழியர் பணிக்கொடைச் செலுத்துகைக்காக ரூபா 62,717,094 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 – 2010 வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 952,160 ஆன நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இவ் இருப்பின் புத்தகப் பெறுமதி ரூபா 576,288 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவிலேனும் இதனை சரிசெய்வதற்கோ அல்லது புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த நூதனசாலை நிர்மாணச் செயற்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மேலும் 15 செயற்திட்டப் பணிகள் நிறைவடைந்திருந்த போதிலும் நீண்ட காலமாக நடைமுறை வேலைகள் கணக்கில் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 50,166,931 இனை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ரூபா 5,961,229 பெறுமதியான 07 ஏழுநாள் அழைப்பு வைப்புச் சான்றிதழ்களும் ரூபா 200,000 பெறுமதியான 02 நிலையான வைப்புக்களும் வங்கியில் பிணையாக வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) “நேர்ட்” நிலையத்திற்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 111,770,056 ஆக காணப்பட்டதுடன் ரூபா 1,517,633 புதுப்பில் பெறுமதி கொண்ட இயந்திரம் மாத்திரம் மீள்மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வியந்திரத்தினை மூலதனமாக்குவதற்கான அடிப்படையொன்றோ அல்லது சபையொன்றினாலோ மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக அப் பிரிவின் தலைவரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) தொழில்நுட்ப பூங்கா கட்டிடத்திற்கு சாயம் பூசுவதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 77,827 தொகை மீண்டெழும் செலவின கட்டிடங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் கணக்கு மீதிகள் ரூபா 11,403,421 ஆக காணப்பட்டதுடன் 5-8 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்திற்குரிய பழைய மீதிகள் ரூபா 5,542,695 ஆகும். மேலும் 3-5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 592,665 நிலுவை கடன் மீதிகளும் 1-3 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 618,261 நிலுவை கடன் மீதிகளும் காணப்பட்டன.

(ஆ) ரூபா 2,060,329 ஆன வியாபார கடன்பட்டோர் மீதியில் 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 128,730 மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தது.

(இ) 2004 ஆம் ஆண்டிலிருந்து ஹிரியால பொருளாதார மத்திய நிலையத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,130,260 மற்றும் தனியார் கம்பனியொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 197,625 என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையத்தினால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக சேவையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,837,474 முற்பணத் தொகை பல வருடங்களாக தீர்க்கப்படாதிருந்ததுடன் விலைப்பட்டியல்களை வழங்காமை, செயற்திட்டங்கள் நடைமுறைக்கிடப்படாமை அதற்கு காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இம் மீதியினுள் 5 வருடங்களுக்கும் மேலான ரூபா 67,500 மீதியும் 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 496,498 மீதியும் 01 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 141,426 மீதியும் உள்ளடங்கியிருந்தன.

(உ) சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த 24 உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடையினை செலுத்துவதற்காக ரூபா 807,818 தொகையொன்று நீண்டகாலமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையினை தீர்வுசெய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 444,965,739 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| கடன்கொடுத்தோர் | 2,060,329 | குறித்த தரப்பினர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் |
| கடன்பட்டோர் | 11,403,421 | |
| ஏழுநாள் அழைப்பு வைப்புக்கள் | 5,961,229 | வைப்புச் சான்றிதழ்கள் |
| நிலையான வைப்புக்கள் | 200,000 | |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 570 | வைப்புச்செய்த தினத்திலிருந்து இரண்டு வருட காலத்தினுள் உரிமை கோரப்படாத காலங்கடந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க முடிந்திருந்த போதிலும் ரூபா 32,800 பெறுமதி கொண்ட மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான ஊக்குவிப்புப் படியினை செலுத்துவதற்காக நிலையம் ரூபா 1,568,786 இனை செலவிட்டிருந்த போதிலும் மேற்படி சுற்றறிக்கைகளின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் ஊழியர் கோப்பு ஆணைக்குழுவின் பரிந்துரையினையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |
| (இ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438(2) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் அ(i),(ii),(iii),(iv) நிதிப்பிரமாணங்கள் 756, 756(4) மற்றும் 771(2) | நிலையத்திற்குச் சொந்தமான ரூபா 6,136,266 பெறுமதி கொண்ட அகற்றப்பட வேண்டிய இருப்புக்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் இரண்டாம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2004 யூன் 29 ஆந் திகதிய பீடீஈ 25 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2006 யூன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/9 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | தொடர்புடைய அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 2,600,748 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவோர்களினால் நிலையத்தில் வைப்புச்செய்யப்பட்டுள்ள ரூபா 64,809,474 தொகை 2004 ஆம் ஆண்டிலிருந்து ஏழுநாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிலையத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 24,792,432 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,249,543 ஆக காணப்பட்டது. இதன் படி மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 18,542,889 பற்றாக்குறையின் அதிகரிப்பொன்றைக் காண முடிந்தது. ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா 12 மில்லியனாலும் ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவினம் ரூபா 6 மில்லியனாலும் அதிகரித்திருந்தமையே இதற்குப் பிரதான காரணியாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியியல் பிரிவு

(i) 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி குடியியல் பிரிவினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த 12 செயற்திட்டங்களிற்காக ரூபா 2,940,000 ஆன நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி குடியியல் பிரிவினால் மீளாய்வாண்டில் நிபுணத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதனால் ரூபா 8,800,000 இனையும் குறைந்த செலவு தொழில்நுட்ப வீடமைப்புச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனால் ரூபா 10,000,000 இனையும் ஈட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் இச்செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமையால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப விற்பனைப் பிரிவு

-----------------------------------------------------

| இலக்குகள் | இலக்கு அடையப்படாமை |
|---|---|
| (i) நாடளாவிய ரீதியில் 80 வீடமைப்புத் திட்ட நிபுணர்களை நியமித்தல் | திட்ட நிபுணர்கள் நியமிக்கப்பட்டிராமை |
| (ii) விதாதா நிலையங்களில் 06 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. |
| (iii) விதாதா நிலையங்களில் 4 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 10 விதாதா கண்காட்சிகளில் பங்கேற்றல் | கண்காட்சிகளில் பங்கேற்றிருக்க வில்லை. |
| (v) விதாதா வள நிலையங்களிலுள்ள உத்தியோகத்தர் களிற்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (vi) பொறியியலாளர் நூதனசாலை | |
| சிறுவர் பூங்கா வசதிகளை வழங்குதல், | நிர்மாணப்பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை |
| நூதனசாலையின் விரிவுரை மண்டபத்தினை புதுப்பித்தல் | புதுப்பித்தல் வேலைகள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| நூதனசாலைக்காக அறிவுரை பிரசுரமொன்றினை தயாரித்தல் மற்றும் விரிவுரை மண்டபத்தினை திறந்து வைத்தல் | அறிவுரை பிரசுரம் தயாரிக்கப் படாதிருந்ததுடன் திறந்து வைத்தல் நடவடிக்கை இடம் பெற்றிருக்கவில்லை. |

(இ) விவசாய மற்றும் அறுவடைக்குப் பின்னரான கிருமிநாசினிகள் பிரிவு

| இலக்குகள் | இலக்கினை அடையாமை |
| --- | --- |
| உயிரியல் எரிவாயுவினால் இயங்குகின்ற குளிரூட்டல் அறையினை மேம்படுத்தல் | உணவுகளை பழுதடையாது நீண்டகாலத்திற்கு வைத்திருப்பதற்காக உயிரியல் வாயு குளிரூட்டிய அறையொன்றை அமைத்தலே செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்ததுடன் செயற்திட்டம் தொடங்கப்பட்டிருக்கவில்லை. |
| காளான் உற்பத்திக் கைத்தொழிலினை முன்னேற்றுவதற்காக உயிரியில் எரிவாயுவினை பயன்படுத்தல் | ரூபா 433,343 மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| தென்னை பயிர்ச்செய்கையின் போது பசளையிடுவதற்கு இயந்திரமொன்றை அறிமுகம் செய்தல் | ரூபா 248,912 செலவில் தயாரிக்கப்பட்டிருந்த உபகரணமானது தேவைக்குப் பொருந்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| ஒற்றைச் சக்கர டிரக்டரினை பிரபல்யப்படுத்தல் | ரூபா 474,308 செலவில் வடக்கு கிழக்கில் பிரபல்யப்படுத்தலிற்கான செயற்திட்டமானது வெற்றியடைந் திருக்கவில்லை. |
| பெரசவி பிரிவிக்காக உருக்குக் கம்பிகள் வார்த்தல் ஹைட்ரொலிக் இயந்திரத்தினை உருவாக்குதல். | ரூபா 770,792 செலவில் இயந்திரம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை இயக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) மீள்சுழற்சி சக்திப் பிரிவு

| இலக்குகள் | இலக்கினை அடையாமை |
| --- | --- |
| உயிரியல் எரிவாயுவினால் இயங்குகின்ற நடுத்தர அளவு அனல்நிலையத்தினை மேம்படுத்தல் | செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| ஆபத்தான கழிவுகள் மற்றும் வைத்தியசாலைக் கழிவுகளை அழித்தொழிக்கும் நிலையமொன்றை தாபித்து அபிவிருத்தி செய்தல் | செயற்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

தேயிலையினை உலர்த்துவதற்காக டீசலினால் இயங்கும் வெதுப்பகம் ஒன்றை நிர்மாணித்தல் -மேற்படி-

விறகினைத் துண்டாக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்குதல். -மேற்படி-

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) எரிபொருளிற்குப் பதிலாக விறகினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் முறைமையொன்றை செயற்படுத்தி மின்சாரத்தினை உற்பத்திசெய்து தேசிய மின்சார முறைமையுடன் இணைத்தல்

(i) எரிபொருளிற்குப் பதிலாக விறகினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் முறைமையொன்றை செயற்படுத்தி மின்சாரத்தினை உற்பத்திசெய்து அதனை தேசிய மின்சார முறைமையுடன் இணைப்பதன் மூலம் மின்சாரத்திற்காக செலவாகும் கிரயத்தினை குறைத்தலே செயற்திட்டத்தின் நோக்கமாக காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இச் செயற்திட்டம் இரண்டு கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 32,913,445 செலவிடப்பட்டிருந்த போதிலும் இது வரை செயற்திட்ட நோக்கத்தினை அடைந்துகொள்ள முடியாது போயிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் முதலாம் காலாண்டில் மின்சார உற்பத்தி முறைமையின் புதுப்பித்தல் வேலைகள் நிறைவடைந்திருந்ததுடன் நவம்பர் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மின்சாரமானது பரீட்சார்த்த அளவில் தேசிய மின்சார முறைமையுடன் இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வியந்திரத்திலிருந்து மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்காக நாளொன்றிற்கு ரூபா 24,480 ஆன அதிகூடிய கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. உற்பத்தி செய்திருந்த மின்சாரத்தினை தேசிய மின்சார முறைமையுடன் இணைப்புச் செய்வதன் மூலம் நாளொன்றிற்கு ரூபா 33,000 வருமானத்தினை பெற்றுக்கொள்ள் முடியுமென நிலையத்தின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துவதற்கான உடன்படிக்கையொன்றோ அல்லது வேறு ஆவணங்களோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து நேர்ட் நிலையத்திற்கு மீளளிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 29,358,044 ஆன பெறுமதிசேர் வரி நீண்டகாலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்காமை

| செயற்திட்டம் | செய்யப்பட்ட செலவினம் | அவதானிப்பு |
|---|---|---|
| சாலியபுர முதியோர் இல்ல த்திற்காக உயிர்வாயு பிறப்பா க்கியொன்றை தயாரித்தல் | 1,898,088 | செயற்திட்டத்தின் நோக்கமான உயிர்வாயு உற்பத்தி செய்யப்படாமை |
| வாழைப்பழம் கொண்டுவருகையில் ஏற்படுகின்ற சேதங்களைக் குறைத்தல் | 855,782 | வாழைப்பழ போக்குவரத்தில் ஏற்படுகின்ற சேதங்களைக் குறைப்பதற்காக பையொன்றை உற்பத்திசெய்தல் செயற் திட்டத்தின் நோக்கமான போதிலும் இதற்காக உற்பத்தி செய்யப்பட்ட பைகள் விவசாயிகள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருக்கவில்லை. |

(இ) 2007 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களிற்குரிய ரூபா 2,637,857 ஆன கிரயம் ஆராய்ச்சிச் செலவினமாக கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைத்திருக்கவில்லை. சில செயற்திட்டங்கள் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்ததுடன் முறைப்படி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மின்குமிழ்கள் தொடர்பான 2002:1231 மற்றும் 2002:1225 ஆம் இலக்க இலங்கை தரநிர்ணயங்களின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2000 மணித்தியால ஆயுட்காலத்தை கடந்த மின்குமிழ்கள் மீதான செயலாற்றல் பரிசோதனை அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்காக 801 மாதிரிகள் கையளிக்கப் பட்டிருந்ததுடன் 02 செயலாற்றல் அறிக்கைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(உ) தரத்தினை பரிசோதிப்பதற்காக நேர்ட் நிலையத்திற்கு கிடைத்திருந்த 338 மின்குமிழ்களில் 14 இற்கு மாத்திரம் செயலாற்றல் அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) மின்குமிழ் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் பிரதான சேவை பெறுனரான இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் மாதிரிகளிற்காக விலைப்பட்டியலை வழங்குவதற்கு 4–19 மாத காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

(எ) (i) நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த எழுதுவினைஞர் ஒருவர் ஒழுக்கத்திற்கு மாறான நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டமைக்காக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். அந்த ஊழியர் தொழில் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கிற்கான தீர்ப்பிற்கமைய பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்த திகதியிலிருந்து மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட திகதி வரை இழப்பீடாக ரூபா 587,406 இனை செலுத்துவதற்கும் அவ் ஊழியரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கும் நிலையத்திற்கு நேர்ந்திருந்தது. இதன் போது முகாமைத்துவத்தினால் 2000 செப்தம்பர் 01 முதல் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த ஊழியர் சேவையிலிருந்து நீக்கப்பட்ட திகதியான 2007 ஓகஸ்ட் 20 ஆந் திகதி வரை அவ்வப்போது ஒப்பந்த சேவைக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. இது முகாமைத்துவத்தின் பலவீனத்தினால் ஏற்பட்டதொன்றல்ல என்றும் வழக்குத் தீர்ப்பின் படி இழப்பீடு செலுத்த நேர்ந்திருந்தது என்றும் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) நிறுவகத்திற்கு சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்காக சட்ட மதியுரைஞர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சட்ட மதியுரைஞர் ஒருவர் இருந்த போதிலும் வழக்கிற்காக இழப்பீடு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை சட்ட மதியுரைஞரிற்கு சட்டக் கட்டணங்களிற்கு மேலாக ரூபா 1,179,000 சட்ட ஆலோசனைகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக மாத்திரம் ரூபா 153,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் பிணைமுறியினை மீறியமைக்காக கிடைத்திருந்த ரூபா 2,290,988 பிணைமுறி வருமானம் ஏழுநாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அத் தொகையினை அதனைக் காட்டிலும் கூடிய நலன் கிடைக்கும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மானியம்/பரிசுகள் ஒதுக்கல் கணக்கின் மீதி ரூபா 1,083,995 ஆக காணப்பட்டதுடன் வருடாந்தம் பொறியியலாளர்களிற்கு வ்ழங்கப்படுகின்ற ஆராய்ச்சி அபிவிருத்தி மானியம்/பரிசுகள் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சேவை வழங்குனர்களினால் நிறுத்தி வைத்தல் வரியினை செலுத்தாமை காரணமாக நிலையத்தினால் ரூபா 5,555 செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்வாகத்தில் ஏற்பட்டிருந்த குறைபாடொன்று காரணமாக நிறுவனத்தின் ஊழியரொருவர் நிலையத்திற்கு எதிராக தொடர்ந்திருந்த வழக்கினால் மீளாய்வாண்டில் ரூபா 587,406 இனை அவ் ஊழியரிற்கு இழப்பீடாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. இது தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு பொறுப்பினை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட்டிருந்த வணிக செயற்திட்டங்களின் பரிசோதனையில் அவ்வாறான 7 வணிக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியமையால் நிலையத்திற்கு ரூபா 440,165 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. செயற்திட்டங்களிலிருந்து கிடைத்திருந்த வருமானத்திற்கும் மேலாக செலவினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) 2006 ஆம் ஆண்டின் டீஎம்எஸ்/30 சம்பள திருத்தத்திற்கு அமைய சம்பளத்தினை செலுத்துகையில் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 57,176 தொகையினை பகுதிபகுதியாக அறவிட்டுக் கொள்வதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கோப்பாயில் விஞ்ஞான நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுடன் 2010 அம் ஆண்டில் ரூபா 5,370,965 ஒப்பந்த பெறுமதிக்கு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக ரூபா 448,343 கிரயமொன்று ஏற்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிர்மாண வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) நிலையத்திற்கு தரச்சான்று முறைமையினை (ISO–9001) அறிமுகப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 110,100 செலவில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் ISO–9001 தரச்சான்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அச் செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 11,283,085 செலவில் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 14 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களின் வேலைமுடிவுறுத்தல்

அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சில செயற்திட்டங்களிலிருந்து பயனுள்ள பிரதிபலன்கள் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் முடிவுறுத்தப்பட்டிருந்த இச் செயற்திட்டங்களை மீண்டும் புதிய செயற்திட்டங்களாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது காலப்பொருத்தமற்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.5 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது இருப்பின் (General) 40% இனை பிரதிநிதித்துவம் செய்திருந்த அசைவுறாத ரூபா 5,815,981 இருப்புக்களும் ரூபா 320,285 ஆன சேதமடைந்த இருப்புக்களும் 07 ஆண்டுகளிற்கும் மேலாக களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தது.

## 4.6 நிலையத்திற்குச் சொந்தமான வளங்களை ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிகள் அமைச்சிற்காக கரவெட்டி பிரதேசத்தில் விஞ்ஞான நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக நேர்ட் நிலையத்தினால் ஊழியம் மற்றும் மேந்தலைக் கிரயத்தினை செய்வதற்கு இணங்கியிருந்ததுடன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,194,626 ஆக இருந்தது. உத்தியோகத்தர்களினதும் தொழிலாளர்களினதும் போக்குவரத்துச் செலவு மற்றும் இணைந்த படிகளிற்காக மதிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபா 930,450 ஆக இருந்ததுடன் உள்ளபடியாக ஏற்பட்டிருந்த செலவினம் ரூபா 1,957,358 ஆக காணப்பட்டது. இது மதிப்பீட்டுக் கிரயத்தில் 110% அதிகரிப்பாகும்.

(ஆ) அமைச்சுடன் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கைக்கு நேர்ட் நிலையத்தினால் செய்யப்பட்டிருந்த செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 மனிதவள முகாமைத்துவம்

பொறியியல்சார் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதே நிலையத்தின் முக்கிய பணியான போதிலும் அப் பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 38 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன.

| பதவிகள் | அங்கீரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆராய்ச்சி விஞ்ஞானிகள் | 05 | 03 | 02 |
| தலைமை ஆராய்ச்சிப் பொறியியலாளர் | 13 | 08 | 05 |
| சிரேஷ்ட ஆராய்ச்சிப் பொறியியலாளர் | 16 | 01 | 15 |
| ஆராய்ச்சிப் பொறியியலாளர் | 21 | 15 | 06 |
| கட்டுப்பாட்டாளர் - தொழில்நுட்ப பூங்கா | 01 | - | 01 |
| - நூதனசாலை | 01 | - | 01 |
| - பேணுகை | 01 | - | 01 |
| - வேலைத்தளம் | 01 | - | 01 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 05 | 02 | 03 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 15 | 12 | 03 |
| | | | 38 |

## 5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க 2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் படி வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை தயாரிக்கையில் வருடாந்த மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீட்டு முன்மொழிவுகள் போன்ற சகல அம்சங்களினதும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய விதத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 07 ஆம் பந்திக்கு அமைய நிறுவனத்தில் பயனுள்ள செயலாற்றுகையினை உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கணக்காய்விற்கு மேலாக

முறைமை மீளாய்வு, செயலாற்றல் மீளாய்வு மற்றும் விசேட புலனாய்வுப் பரப்புகளின் பால் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ் விடயங்களின் பால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கட்டுப்பாடு

நேர்ட் நிலையத்தின் ELE/COM/59/11 ஆம் செயற்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற பெட்டரிகளின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், வேலைகளிற்கான கட்டளைகளைப் பதிவுசெய்தல், சிட்டையிடல், பரிசோதனைகளை மேற்கொள்ளல், அறிக்கை தயாரித்தல், அறிக்கைகளை வழங்குதல், மாதிரிகளை மீள ஒப்படைத்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் தனியொரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானங்களை உச்சப்படுத்துவதற்கோ அல்லது ஏற்படச் சாத்தியமான தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை நடாத்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 7:4:1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு தடவையேனும் கணக்காய்வுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 03 கணக்காய்வுச் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்கள பிரதிநிதியொருவரின் சேவையினைப் பெற்றுக்கொள்தல் கட்டாயமாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுச் சபைக் கூட்டங்களிற்காக அவ்வாறான பிரதிநிதித்துவம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) செயற்திட்டக் கிரயமிடல் மற்றும் முகாமைத்துவம்

(ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## 15. இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2011 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கைக்கான பணிப்பாளர்கள் சபையின் அவதானிப்புகள்.

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (சி) ஆம் பிரிவின் நியதிகளின்படி 2011 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தொடர்பில் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அவதானிப்புகள்.**

**இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் மற்றும் உப தலைப்புகள் 2012/06/08 ஆம் திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் அதிபதியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

(அ) நியமம் 9 இற்கு முரணாக, பணமும் பணத்திற்குச் சமனானவையின் கீழ் 03 மாதத்திற்கு மேலாக 5,239,980/= ரூபா தொகை நிலையான வைப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

***இணங்கப்படுகின்றது. எனினும், 9 ஆம் இலக்க நியமத்தின்படி 2012 ஆம் ஆண்டிலிருந்து பணமும் பணத்திற்குச் சமனானவையும் என்பதன் கீழ் 03 மாதங்களை விஞ்சிய வைப்புகளைக் காட்டாதிருப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.***

(ஆ) பணியார்களின் பணிக்கொடைக்கான கொடுப்பனவிற்காக 62,717,094/= ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அந்தத் தொகை முதலிடப்படவில்லை.

***இணங்கப்படுகின்றது. தேவைப்பட்டவாறு, தேவைப்பட்ட போதெல்லாம் பணியாளர்களுக்கான பணிக்கொடையைச் செலுத்துவதற்கு திறைசேரியிடமிருந்து நிதியினை நாம் பெற்றுகொண்டோம். ஆகையால், அத்தகைய நிதியினை வேறாக முதலிடுவதற்கான சாத்தியமில்லை. இதனை ஒத்த விடயத்தை முன்னரும் நீங்கள் சுட்டிக்காட்டியிருந்ததுடன், நாம் ஒவ்வொரு தடவையும் அதனை ஒத்த விளக்கத்தை வழங்கியுள்ளோம்.***

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2006/2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 952,160/= தொகையான நுகரக்கூடிய பொருட்கள் கொள்வனவு நிலையான சொத்துக்களுக்காக கணக்கிடப்பட்டுள்ளது. 2011 டிசெம்பர் 31 இலுள்ளவாறு இந்த கையிருப்பின் புத்தகப் பெறுமதி 576,288/= ரூபா என்பதுடன், ஆண்டினிறுதியிலும்கூட இந்த விடயத்தைத் திருத்துவதற்கோ அல்லது புத்தகத்திலிருந்து பதிவழிப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

***இணங்கப்படுகின்றது. 2012 -3 ஆம் இலக்க சபைக் கூட்டத்தின் பிரமாணங்களின் 3.3 ஆம் இலக்க விடயத்தின் கீழ், முகாமைத்துவம் நிலையான சொத்துக்களின் பகுப்பாய்வின் பின்னர் நிலையான சொத்துக்களை நாளதுவரைப்படுத்துதல் வேண்டும். மேலும், முகாமைத்துவத்தினால் மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படும்போது, நிலையான சொத்துக்களிலிருந்து அத்தகைய விடயங்களைப் பதிவழிப்புச் செய்வதற்கு அதனது பரிந்துரைகளையும், ஒழுங்குககளையும் வழங்குகின்றது.***

(ஆ) அரும்பொருளக நிருமாணக் கருத்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட 15 ஏனைய கருத்திட்டங்கள் 2008 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்திருந்த போதிலும், நீண்ட காலமாக வேலை தொடர்ந்து கொண்டிருக்கும் கணக்கில் 50,166,931/= ரூபா தொகையின் முதலீட்டினைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

. ***இணங்கப்படுகின்றது. அரும்பொருளகத்தின் தாபனம் 2012 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதனால், 2012 ஆம் ஆண்டில் அது முதலீடாக்கப்படவுள்ளது.***

(இ) 07 அழைப்பு வைப்புக்களின் வைப்புச் சான்றிதழ்கள் 5,961,229/= ரூபா தொகை மற்றும் 200,000/= பெறுமதியான 02 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் வங்கி உத்தரவாதமாக இடப்பட்டுள்ளன. இது, நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை.

***இணங்கப்படுகின்றது. ( ரூபா.5,961,229/= + ரூபா 200,000/=) தொகையான வைப்புச் சான்றிதழ்கள் கீழே தரப்பட்டவாறு பிணை உத்தரவாதமாக இடப்பட்டுள்ளன.***

***I. 1,126,000/= ரூபா தொகைக்கு 3/2011 ஆம் இலக்க செயலாற்றுகை முறி உரியதாக்கப்பட்டுள்ளது.***

***பொலநறுவையில் தாதிகளின் தங்குமிட நிருமாணத்திற்காக சுகாதார அமைச்சிடமிருந்தான நகர்வு முற்பணத்தின் 20% பொருட்டு 4,504,000/= ரூபா தொகைக்கான 16/2011 ஆம் இலக்க உத்தரவாதக் கடிதம்***

***II. ரொயாட்டா லங்கா (பிறை.) லிமிடெட்டிற்காக 75,000/= ரூபா தொகையை உத்தரவாதப்படுத்தி உத்தரவாதக் கடிதம்.***
***(நிதிக்கூற்றக்களில் இந்த பிரகடனம் செய்யப்படவில்லை)***

***மேலுள்ள முறிகளுக்காக, 07 நாள் அழைப்பு வைப்புக்களின் 5,961,229/= ரூபா தொகையான ஏழு வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் 200,000/= ரூபா பெறுமதியான 02 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் வங்கி உத்தரவாதமாக வைக்கப்பட்டுள்ளது.***

(ஈ) தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி அபிவிருத்தித் நிலையத்திற்குச் சொந்தமான பொறித் தொகுதியின் பெறுமதி ரூபா தொகையாக 111,770,056/= இருந்திருந்ததுடன், 1,517,633/= ரூபா பெறுமதியில் திருத்தப்பட்ட இயந்திரமொன்று மட்டுமே மீள் பெறுமதியிடப்பட்டிருந்தது. குழுவினால் மீள் மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக இயந்திரத்தை மீள்மதிப்பிடுவதில் அர்த்தமில்லை என்றபோதிலும், பிரிவின் தலைவரினால் அவராலேயே அது மீள மதிப்பிடப்பட்டுள்ளது.

***இணங்கப்படுகின்றது. இந்த இயந்திரம் திருத்தப்படுகையில், இதன் பெறுமதி பூச்சியம். இதன்படி, இயந்திரத்தைத் திருத்தியதன் பின்னரும் இந்த இயந்திரம் பற்றிய நிபுணத்துவ அறிவைக் கொண்டிருக்கின்ற திணைக்களத் தலைவரின் விதப்புரைகளுக்கமைவாகவும் இது மதிப்பிடப்பட்டிருந்தது. தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி அபிவிருத்தித் நிலையத்தில் இருக்கின்ற ஏனைய இயந்திரத்தை மீள மதிப்பிடுவதற்கு குழுவொன்று ஏற்கனவே நியமிக்கபட்டுள்ளது.***

(உ) தொழில்நுட்ப பூங்காக் கட்டடத்திற்கு தீர்ந்தை பூசுவதற்காக உறப்பட்ட மீண்டெழும் செலவீனமான 77,027/= ரூபா கட்டடங்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.
***தொழில்நுட்பப் பூங்காக் கட்டடத்தைப் புனர்நிருமாணம் செய்வதற்கு தீந்தை பூசுதலைச் செய்ய வேண்டியிருந்தது. இதற்குத் தேவைப்பட்டிருந்த பணம் திறைசேரியினால் அனுமதிக்கபட்டு மூலதனப் பாதீட்டின் கீழ் மூலதனக் கட்டடப் புனர்நிருமாண ஒதுக்கத்திலிருந்து செலவுறப்பட்டது. ஆகவே, இது, கட்டடக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.***

### 2.2.3 <u>பெறக்கூடிய,கொடுப்பனவு செய்யக்கூடிய கணக்குகள்</u>

(அ) 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் வியாபாரம் மற்றும் ஏனைய கடன்பெறுநர்களின் நிலுவை 11,403,421/= ரூபா தொகையாகவிருந்ததுடன், 5 முதல் 8 வருடங்களுக் கிடையிலான பழைய நிலுவைகள் 5,542,695/= ரூபா தொகையாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, 3 முதல் 5 வருடங்களுக்கிடையிலான மற்றும் 1 முதல் 3 வருடங்களுக் கிடையிலான பழைய நிலுவைகள் முறையே 592,665/= ரூபா மற்றும் 618,261/= ரூபா தொகைகளாக இருந்தன.
***இணங்கப்படுகின்றது. 2011/12/31 ஆம் திகதி வரை செலுத்த வேண்டிய நிலுவை மீதிக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் வியாபார கடன்பெறுநர்களுக்கு கணக்காய்வாளர்களின் பிரதிகளுடன் 2012/01/27 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளன. ஆனால், எவரும் செலுத்த வேண்டிய நிலுவை மீதி பற்றிய உறுதிப்படுத்தலுக்கு உரிய பதிலை அனுப்பவில்லை.கடன்களை உறுதிப்படுத்துவதென்பது நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கப்பால்பட்டது.***

(ஆ) வியாபாரக் கடன்தருநர்களின் நிலுவை, 4 வருடங்களுக்கும் அதிகமான 128,730/= ரூபா மீதி உள்ளடங்கலாக 2,060,329/= ரூபா தொகையாக இருந்தது.

***இணங்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் 4 வருடங்களை விஞ்சியிருந்த 118,430.28 ரூபா தொகையாக கணக்கிடப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூல பணப் பற்றுச்சீட்டுக்களை வியாபார கடன்தருநர்கள***

***சமர்ப்பித்திருக்காமை காரணமாக மீதமாக இருக்கின்ற 10,300/= ரூபா செலுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் உரிய கணக்கிற்குள் அவற்றைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.***

(இ) 2004 ஆம் ஆண்டிலிருந்து ஹிரியல பொருளாதார நிலையத்திலிருந்து பெறக்கூடிய 5,130,260/= ரூபா தொகை, ஆய்வு காலப்பகுதியின் இறுதியில் தனியார்துறைக் கம்பனியிலிருந்து பெறக்கூடிய 197,625/= ரூபா தொகை தீர்க்கப்படவில்லை.

***இணங்கப்படுகின்றது.இது இந்த ஆண்டு ஆண்டு காலப்பகுதியில் தீர்க்கப்படும்.***

(ஈ) நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடமிருந்து பல்வேறு கருத்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட 10,837,474/= ரூபா தொகையான முற்பணங்கள் பல ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாதிருக்கின்றது என்பதுடன், விலைப்பட்டியல் வழங்கப்படாத நிலுவையாக அல்லது நடைமுறைப்படுத்தப்படாத கருத்திட்டங்களாக அவதானிக்கப்படுகின்றன. இந்த மீதிகள் 05 வருடங்களுக்கு மேலான 67,500/= ரூபா தொகையான 3 முதல் 5 வரையான வருடங்களுக்கிடையிலான மீதி 496,498/= மற்றும் 141,426/= தொகையான 01 வருடத்திற்கும் மேலான மீதிகளை உள்ளடக்குகின்றன.

***இணங்கப்படுகின்றது. 5 வருடங்களை விஞ்சிய முற்பணக் கொடுப்பனவு 67,500/= ரூபா இரத்தினபுரியிலுள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கான நீர்த் தாங்கியொன்றை நிருமாணிப்பதற்கானது. கருத்திட்டமானது, 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன், இதன் மதிப்பிடப்பட்ட செலவு 90,000/= ரூபா என்பதுடன், இதில் 75% கொடுப்பனவு ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. எனினும், செய்யப்பட்ட வேலையின்படி, 2012 ஆம் ஆண்டில் முற்பணக் கொடுப்பனவிற்கான விலைப்பட்டியலை ஆக்குவதற்கு ஒழுங்குககள் செய்யப்படும்.***

***அத்துடன், ஏனைய முற்பணங்களுக்கும் விசேட அவதானம் ஈர்க்கப்படும் என்பதுடன் அவற்றினைத் தீர்தானிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.***

(உ) பதவியை இராஜினாமாச் செய்திருந்த 24 பணியாளர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான நீண்ட காலத்திற்கு மேலாக 807,818/= ரூபா தொகை ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அந்தத் தொைகையைத் தீர்ப்பதற்கோ அல்லது வருவாய்க்கு மீண்டும் எழுதுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

***அத்தகைய பணியாளர்கள் 2012 ஆம் ஆண்டில் இதன்படி அறிவிக்கப்படுவர் என்பதுடன், அவர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்கான வருமானமாக அவற்றை எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.***

### 2.2.4 கணக்காய்விற்கு சான்றுகள் போதாமை

| விடயம் | பெறுமதி (ரூபா) | சான்றுகள் கிடைக்கப் பெறச்செய்யாமை |
|---|---|---|
| நிலையான வைப்புகள் | 444,965,739/= | கணக்கெடுப்புச் சபையின் அறிக்கைகள் |
| | | ***இணங்கப்படுகின்றது. கணக்காய்வு செய்யப் படுகையில் பரிசீலனை அறிக்கை தயாரிக்கப் பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு வழங்கப்பட வில்லையாகையால் தற்போது இந்த அறிக்கை எம்மிடம் இருக்கின்றது.*** |

| | | |
|---|---|---|
| கடன்தருநர்கள் - 2,060,329/= | | ***உரிய தரப்பினரிடமிருந்து மீதி பற்றிய உறுதிப்படுத்துதல்*** |
| கடன்பெறுநர்கள்- 11,403,421/= | | |

***செலுத்த வேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகள் பற்றி உரிய தரப்பினர்கள் எமக்கு உறுதிப்படுத்தியிருக்கவில்லை.***

| | |
|---|---|
| ஏழு நாள் அழைப்பு வைப்புகள் – 5,961,229/= | ***வைப்புச்சான்றிதழ்கள்*** |
| நிலையான வைப்புகள் - 200,000/= | |

***இணங்கப்படுகின்றது. உறுதிப்படுத்தல் மீது அறிக்கையைப் பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.***

### 2.2.5 சட்டங்கள், ஒழுங்குகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காதவை

| | | |
|---|---|---|
| (அ) | நிதி ஒழுங்கு 570 | வைப்பிலிடப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களுக்கும் மேலாக கோரப்படாத வைப்புக்களை வருவாய்க்குள் மீண்டும் எழுத முடியும் என்ற போதிலும், 32,800/= தொகையான திருப்பிச் செலுத்தக்கூடிய வைப்புக்ககளை வருவாய்க்குள் எழுது வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

***இணங்கப்படுகின்றது.பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின்படி, 5 வருடங்களை விஞ்சிய காலப்பகுதி கோரப்படாதிருக்கின்ற வைப்புக்கள் மாத்திரமே தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் வருவாய்க்குள் எடுக்கப்படும். எனினும், கணக்காய்வு அவதானிப்புகளின் படி,நி.ஒ.வி இல.570 பணிப்பாளர்களின் சபைக்கு அவர்களின் அவதானிப்பிற்காக வழங்கப்படும்.***

| | | |
|---|---|---|
| (ஆ) | 2009, மே 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 02 பீஇடி/12 இன் பந்தி 8.3.3 | ஆய்வாண்டு காலப்பகுதியில் ஊக்குவிப்புப் படிக்கான கொடுப்பனவு 1,568,786/= ரூபா நிலையம் செலவுற்றிருந்த போதிலும், வேதனங்கள், பதவியணி ஆணைக் குழுவினதும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விதப்புரைகள் குறிப்பிடப்பட்ட சுற்றிக்கைகளுக்கமைவாக தேவைப்படுத்தியவை பெற்றிருக்கவில்லை. |

***மு.சே.தி சுற்றறிக்கை 39 வேதனங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றி வரையறுத்திருந்தது, ஆனால், இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கல்ல.1999 இலிருந்து பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அனுமதியின் கீழ் ஊக்குவிப்புகள், தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.***

| | | |
|---|---|---|
| (இ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438(2)(அ)(i)(ii),(iii) மற்றும் (iv) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றிக்கை மற்றும் 756, 756 (4) மற்றும் 771 (2) ஆம் ஒழுங்குவிதிகள் | நிலையம் 6,136,266/= ரூபா மதிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை அகற்றுவதற்கு கொண்டிருந்த போதிலும், அது தொடர்பில் பந்தி 2 இன் நியதிகளில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

***பிரிவுகளின் தலைவர்களினதும், பணிப்பாளர்களினாதும் பரிந்துரைகளின்படி 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கையிருப்புகளின் ஏதேனும் அத்தகைய பொருட்களை அகற்றவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.***

(ஈ) 2004 யூன் 29 ஆம் திகதிய PD/25 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை 2006 யூன் 27 ஆம் திகதிய PF/PE/9 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

உரிய அமைச்சரின் அங்கீகாரமின்றி, நிதி அமைச்சின் ஒருங்கிசைவின்றி நிலையான வைப்புகளில் 2,600,748/= ரூபா தொகை முதலீடப்பட்டுள்ளது.

***இணங்கப்படுகின்றது. வைப்புக்கள் 1985 ஆம் ஆண்டிலிருந்து காலத்திற்குக் காலம் செய்யப்பட்டுள்ளன. நிலையான வைப்புகளிலிருக்கின்ற அத்தகைய பணத்தை உரிய அனுமதிகளுடன் மாற்றி அரசாங்க நிறுவனத்தில் தற்காலிக மேலதிக முதலீடு வைப்புக்களில் வைப்புச் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.***

**<u>கொடுக்கல் வாங்கல்கள் பொருத்தமான அதிகாரியினால் ஆதரவளிக்கப்படவில்லை.</u>**

வாடிக்கையாளர்களினால் பல்வேறு கருத்திட்டங்களுக்காக 2004 ஆம் ஆண்டிலிருந்து ஏழு நாள் அழைப்பு வைப்புகளில் நிறுவனத்தில் வைப்பிடப்பட்ட 64,809,474/= ரூபா தொகை முதலீட்டிற்காக பணிப்பாளர்கள் சபையினது அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

***இணங்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம், 2012 - 2 ஆம் இலக்க சபைக் கூட்ட பிரமாணக்குறிப்பின் 6.1 ஆம் இலக்க விடயத்தின் கீழ் இந்த வைப்புக்களுக்காகப் பெறப்பட்டிருந்தது.***

## 3. <u>நிதி மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>நிதிப்பெறுபேறுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 ஆம் ஆண்டு திசெம்பரில் முடிவுற்ற ஆண்டுக்கான நிலையத்தின் தொழிற்பாடு முன்னைய ஆண்டுக்காகத் தெரிவிக்கப்பட்ட 6,249,543/= ரூபா பற்றாக்குறையுடன் ஒப்பிடுமிடத்து 24,792,432/= ரூபாவை பற்றாக்குறையாகக் காட்டியிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டுக்கான நிதிப் பெறுபேறு களிலுள்ள பற்றாக்குறை 18,542,889/= ரூபா அதிகரிப்பைக் சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கான பிரதான காரணம், தன்னாள் வேதனாதிகளில் 12 மில்லியன் ரூபா அதிகரிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் 6 மில்லியன் ரூபாவினால் அதிகரித்ததுமேயாகும்.

***இணங்கப்படுகின்றது.***

## 4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>

### 4.1 <u>செயலாற்றுகை</u>

(அ) சிவில் பிரிவு

------------------

(i) 2011 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தின்படி,சிவலி பிரிவினால் நடைமுறைப்படுத்து வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள 12 கருத்திட்டங்களுக்காக 2,940,000/= ரூபா மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்றிட்டத்தின்படி, ஆய்வாண்டு காலப்பகுதியில் சிவில் பிரிவு ஆற்றல்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தி அதிலிருந்து 8,800,000/= ரூபா தொகையையும், குறைந்த செலவிலான தொழில்நுட்ட அமைப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 10,000,000/= ரூபா தொகையினையும் உழைப்பதற்கு எதிர்பார்த்திருந்தது. இந்த கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லையாகையால், எதிர்பாக்கப்பட்ட வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்பச் சந்தைப்படுத்தல் பிரிவு

| இலக்கு | இலக்கு எட்டப்பெறாமை |
|---|---|
| (i) நாடளாவியரீதியில் 80 வீடமைப்புத் திட்டமிடல் தொழிநட்பவலர்களை நியமித்தல். | திட்டமிடல் தொழில்நுட்பவலர்கள் நியமிக்கப்படவில்லை. |
| (ii) விதாதா நிலையத்தில் 06 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். | விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதாதா நிலையத்தில் 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டிருக்கவில்லை |
| (iv) விதாதா கண்காட்சியில் பங்குபற்றுதல் | கண்காட்சிகளில் பங்குபற்றியிருக்க வில்லை |
| (v) விதாதா வளங்கள் நிலையத்திலுள்ள அலுவலர்களுக்கு விழிப்புணர் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். | விழிப்புணர்வூட்டல் நிகழச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| (vi) பொறியியல் அரும்பொருளகம் | |
| அரும்பொருளக விரிவுரை மண்டபத்தை நவீனமயப்படுத்தலில் சிறுவர் பூங்கா வசதிகளை வழங்குதல். | நிருமாண வேலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை, நவீனமயப்படுத்தல் வேலைகள் செய்யப்படவில்லை |
| அரும்பொருளகத்திற்கான அறிவுறுத்தல் தொடர்பான கையிதழைத் தயாரித்தல் மற்றும் விரிவுரை மண்டபத்தை திறத்தல் | அறிவுறுத்தல் கையிதழ்கள் தயாரிக் கப்பட்டிருக்கவில்லை திறப்பு இடம் பெறவில்லை. |

(இ) கமத்தொழில், பிந்திய அறுவடைச் சேதப் பிரிவு

| இலக்கு | இலக்கு எட்டப்பெறாமை |
|---|---|
| உயிரியல் எண்ணெயினால் தொழிற்படுத் தப்படுகின்ற குளிரூட்டல் அறையைச் செம்மைப்படுத்துதல். | கருத்திட்டத்தின் குறிக்கோள் உணவினைப் பேணிப் பாதுகாப்பதற்கான உயிரியல் எண்ணெய் குளிருட்டி அறையை நிருமாணிப்பதாக இருந்தது. ஆனால் அது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| காளான் கைத்தொழிலைச் செம்மைப் படுத்துவதற்காக உயிரியல் எண்ணெயைப் பயன்படுத்துதல். | 433,343/= ரூபாவில் மதிப்பிடப்பட்ட இந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| தென்னைப் பயிரிடலுக்கு உரத்தைப் பிரயோகிப்பதற்கான இயந்திரத்தை அறிமுகப்படுத்துதல். | 248,912/= ரூபா செலவில் பொருத்தப்பட்ட அந்த இயந்திரம் குறித்த நோக்கத்திற்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. |

| | |
|---|---|
| ஓற்றைச் சக்கர ரக்டரைப் பிரபல்யப் படுத்துதல். | வடக்கு, கிழக்கில் பிரபல்யப்படுத்துவற்கு செய்திட்டமொன்று 424,308/=, ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், அது, வெற்றியளிக்கவில்லை. |
| கட்டடத்திற்குத் தயாராகவுள்ள காணிக்கு கம்பி வேலியை அமைப்பதற்கான இயந்திரத்தைக் கண்டுபிடித்தல். | இயந்திரம் 770,792/= ரூபா செலவில் ஆக்கப்பட்ட போதிலும், இது வரையில் தொழிற்படுத்தப்படவில்லை. |

(ஈ) புதுப்பிக்கத்தது சக்திப் பிரிவு
--------------------------------

| இலக்கு | இலக்கு எட்டப்பெறாமை |
|---|---|
| உயிரியல் எண்ணெயினால் இயக்கப்பட்ட நடுத்தர அளவு சூடாக்கியைச் செம்மைப் படுத்துதல். | கருத்திட்டம் ஆரம்பித்திருக்கவில்லை. |
| தீங்கிழைக்கும் கழிவுகள் மற்றும் வைத்தியசாலை கழிவுகள் அகற்றம் கருவியைஉருவாக்கி, மேம்படுத்ததல். | கருத்திட்டம் மீதான வேலை ஆரம்பித்திருக்க வில்லை. |
| டீசல் மூலம் தீ மூட்டி தேயிலை உலரவைக்கும் 'கில்ன்' என்பதை 'டென்ரே' மூலம் தீ மூட்டுவதற்கு மாற்றுதல். மரத்தை துண்டாக்கும் இயந்திரத்தை உருவாக்குதல். | கருத்திட்டம் மீதான வேலை ஆரம்பித்திருக்க வில்லை. |

***2011 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டமானது, தேவைப்பட்ட அனைத்து ஆராய்ச்சி பொறியியலாளர்கள் மற்றும் உதவி அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால், சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்கள் மற்றும் உதவி அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியவில்லை. சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், விண்ணப்பங்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 11 ஆராய்ச்சிப் பொறியியலாளர்களில் 2 பேர் நிலையத்திலிருந்து விலகியிருந்ததுடன், 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3 பொறியியலாளர்கள் ஓய்வுபெற்றிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின்படி, 56 ஆராய்ச்சிப் பொறியியலாளர் (பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள்) இருத்தல் வேண்டும், ஆனால், 2011 இல் 31 பொறியியலாளர்களே இருக்கின்றனர். ஆராய்ச்சிப் பொறியியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் நாம் முகம்கொடுக்கின்ற கஷ்டங்கள் காரணமாக, ஆராய்ச்சி வேலையுடன் தொடர்பட்ட (கட்டட நிருமாணம், ஆராய்ச்சி முடிவுகளைப் பெறுதல்) தற்போதைய அபிவிருத்திச் செயற்பாடுகளை பாதிக்காத வகையில் எம்.எம் 1-1 வேதனை வகைப்பாட்டில் 7 பொறியியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டதன்படி, எம்மால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் இலக்குகளை அடைய முடியாது போய்விட்டது உண்மை.***

***மேலும், உரிய திட்டங்களின் சில விடயங்கள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, "விதாதா" நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகத்தின் பங்களிப்பினை தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு வேண்டுகின்றது. ஆகையால், முன்னைய ஆண்டின் அனுபவங்களின் அடிப்படையில், தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், எமது வேலைத் திட்டத்தில் எமது பங்களிப்பினை அடையாளங்கண்டுள்ளோம். எவ்வாறாயினும், எம்மால் இலக்கு வைக்கப்பட்டவாறு அமைச்சு அல்லது அத்தகைய ஏனைய நிறுவனங்கள் அவர்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்தாத சந்தர்ப்பத்தில் குறிப்பாக எமது திட்டங்களின் அடிப்படையில் எமது பங்களிப்பினைத் தேவைப்படுத்தாதிருக்கக்கூடும்.ஆகையால் வேறுபாடுகள் காணப்படுகின்றன.***

***அதேபோன்று நாம் திட்டமிட்ட சில செயற்பாடுகள் ஏனையவர்களினால் எதிர்பார்க் கப்படுகின்ற சேவைகளுக்கான எமது கேள்வியில் தங்கியிருக்கின்றது. உதாரணமாக, வலு ஆய்வு, தொழிற்றுறை சேவைகளின் ஏற்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளின் ஏற்பாடு போன்றவையைக் குறிப்பிட முடியும். கேள்வி இல்லாதிருக்கின்றபோது திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை.கேள்வி அதிகரிக்கையில் தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம் இலக்குவைக்கப்பட்ட அளவிற்கும் மேலாக வேலை ஆற்ற வேண்டியிருக்கின்றது.***

***மேலும், செயலாற்றுகையை பயனுறுதிவாய்ந்ததாகக் கொண்டு வருவதில் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, செயலாற்றுகையைத் தயாரிப்பதில் திணைக்களத் தலைவர்களினால் பணிப்பாளர்களினால்/ அலுவலர்களினால் தரப்பட்டவற்றை விஞ்சுகின்ற புதிய இலக்குகளை முகாமைத்துவம் வழங்கியுள்ளது. இது, உண்மையில் தொடர்புபட்ட அலுவலர்களை சிறந்தமுறையில் செயலாற்றுவதற்கு ஊக்குவிக்கின்ற நடவடிக்கையாக இருந்தது. எனினும், செயலாற்றுகையை மீளாய்கின்றபோது, அத்தகைய உயர் இலக்குகள் அடையப்படவில்லை என்பது விமர்சனமாக இருந்தது.***

***அதேநேரம், நிச்சயமின்மையால் கருத்திட்ட வேலைகள் நெருக்கடிக்குள்ளாகின்றன. ஆகையால், சில நேரங்களில் திட்டங்களில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. ஒட்டுமொத்தத்தில், எதிர்பார்க்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலக்குகள் அத்தகைய கருத்திட்டங்களின் தன்மையின் காரணமாக வழமையாக அடையமுடியாது போகின்றன.***

**4.2 <u>முகாமைத்துவத்தின் இயலாமை</u>**

(அ) மரத்தை எண்ணெயாகப் பயன்படுத்தி மின்சாரத்தை உருவாக்குதலும், உருவாக்கப்பட்ட மின்சாரத்தை தேசிய மின்சார இணைப்பிற்கு இணைப்பதனையும் தொழிற்படுத்துதல்

---

(i) கருத்திட்டத்தின் குறிக்கோள், மின்சாரம் மீதான செலவினத்தைக் குறைக்கும் நோக்கில் மரத்தை எண்ணெயாகப் பயன்படுத்தி மின்சாரத்தை உருவாக்கி உருவாக்கப்பட்ட மின்சாரத்தை தேசிய மின்சார இணைப்பிற்கு இணைப்பதனையும் தொழிற்படுத்துதல். கருத்திட்டம் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2011 டிசெம்பர் 31 32,913,440/= இல் ரூபா செலவில் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்றேல், கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் இன்றுவரை எய்தப்படவில்லை.
***இணங்கப்படவில்லை.கருத்திட்டத்தின் குறிக்கோள் மரத்தைப் பயன்படுத்தி சிக்கனமான முறையில் மின்சாரத்தை உற்பத்திசெய்வதன் மூலம் இலங்கையில் 'கசிபியர்' தொழில்நுட்பத்தைத் தாபிப்பதும், தொழில்நுட்பவலர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு அது கிடைக்கப்பெறும் வகையில் காட்டுதலும், செய்து காட்டுதலுமாக இருந்தது. இந்தக் கருத்திட்டத்தின் பல சாதனைகளை நாம் அடைந்திருந்தமை வெளிப்படை.***

***(ii)*** ஆய்வாண்டு காலப்பகுதியின் முதல் காலாண்டில் மின்சாரத்தை உருவாக்கும் முறைமை திருத்தப்பட்டிருந்ததுடன், நவம்பர் மாதத்தில் உருவாக்கப்பட்ட மின்சாரம் பரிசோதனை அடிப்படையில் தேசிய மின்சார இணைப்பிற்கு இணைக்கப்பட்டது. மின்சாரத்தை உருவாக்குவதற்கான நாளாந்த செலவான 24,480/= ரூபா தொகை மிகவும் உயர்வானதாகும். உருவாக்கப்பட்ட மின்சாரத்தை தேசிய மின்சார இணைப்பிற்கு இணைப்பதன் மூலம் நளொன்றிற்கு 33,300/= ரூபாவை உழைக்க முடியுமென்று நிலையத்தின் தவிசாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்த போதிலும், அந்த நிலைமையை உறுதிப்படுத்தும் உடன்பாடெதுவும் அல்லது ஏனைய ஆவணமெதுவும் இருக்கவில்லை.
***அந்நேரத்தில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தகவல்கள் சாத்தியப்பாட்டாய்விற்கு சாதாகமாக இருந்தன.***

***(iii)*** இறைவரி வருமானித் திணைக்களத்திடமிருந்து நீண்ட காலமாகப் பெறப்படாதிருந்த பெறுமதி சேர் வரி மீள் அளிப்பாக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினால் பெற்றிருக்கக்கூடிய தொகை 29,358,044/= ரூபாவாகும்.
***இணங்கப்படுகின்றது.எம்மிடமிருக்கின்ற தகவல்களின்படி, இது, இறைவரி வருமானத் திணைக்களத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட பெறுமதி சேர் வரி மீளளிப்பு நிதியாகும். இறைவரி வருமானத் திணைக்களம் பணத்தை மீளளிப்பதாக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்கு அறிவித்திருந்தது. பெறுமதி சேர் வரிக் கணக்காய்வொன்று செய்யப்படுதல் வேண்டும். இறைவரி வருமானத் திணைக்களத்தினால்***

***அனுப்பப்பட்ட 2008.07.24 மற்றும் 2010.8.26 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களுக்கமைவாக உரிய தகவல்களை நாம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். மேலும், எமது அலுவலர்கள் பல தடைவைகள் இறைவரி வருமானத் திணைக்களத்திற்கு விஜயம் செய்திருந்ததுடன், இந்த விடயம் தொடர்பில் 11/11/2011, 07/09/2011, 03/03/2011, 15/03/2011, 11/05/2010, 15/03/2011, 30/11/2010 மற்றும் 21/08/2008 ஆம் திகதிகளில் நாம் கடிதத் தொடர்புகளையும் மேற்கொண்டிருந்தோம்.***

***மேலும், 2010/2011 ஆம் ஆண்டிலும் தொகை நிலுவையின்படி இதே திணைக்களத்தின் பிரதி ஆணையாளருடனான ஆட்சேபம் பற்றி நீண்ட பதிவு நாம் பதிவுகளைக் கொண்டிருக்கின்றோம் என்பதைக் குறிப்பிடுகின்றது.***

***இந்த விடயத்தைத் தீர்ப்பதற்கு இறைவரி வருமானத் திணைக்களத்துடன் தொடர்ச்சியாக முயற்சி செய்யப்படுகின்றது.***

**(ஆ)** **கருத்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடையப்பெறாமை**

| கருத்திட்டம் | உறப்பட்ட செலவினம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| ---------- | ------------- | ---------------- |
| | ரூபா | |
| சாலியபுர வயோதிபர் இல்லத்தில் உயிரியல் வாயு உருவாக்கி யொன்றை நிருமாணித்தல். | 1,898,088/- | உயிரியல் வாயுவை உருவாக்கு வதன் குறிக்கோள் எய்தப்பட வில்லை. |

***இணங்கப்படவில்லை.இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் மலசலக் கழிவுகளினால் சூழல் மாசுபடுதலை உயிர்வளியற்ற உயிரனங்கனினால் செரிமானப்படுத்திக் குறைப்பதாகும் இந்த மலசலக் கட்டடத் தொகுதி நிலத்திற்குக் அமைக்கப்பட்டிருக்கின்றது.இதன் காரணமாக, குறித்த அளவான உயிரியல் வாயுவினையே உற்பத்தி செய்ய முடிந்தது.எனினும், சிறிளவிலான உயிரியல் வாயுவை பெறுவதற்கு மேலாக பிரதான சாதனைகள் உணர்ந்துகொள்ளப்பட்டுள்ளன.***

| | | |
|---|---|---|
| வாழைப்பழங்களை கொண்டு செல்லும் போது ஏற்படுகின்ற சேதத்தைக் குறைத்தல் | 855,782/- | இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள் வாழைப்பழங்களைக் கொண்டு செல்கையில் ஏற்படுகின்ற சேதத்தைக் குறைப்பதற்கு பைகளை உற்பத்தி செய்வதாக இருந்த போதிலும், இந்நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட பை விவசாயிகளிடையே பிரபல்யம் அடையவில்லை. |

***இணங்கப்படுகின்றது. முன்னோடி கருத்திட்டமாக பொருத்தமான பையொன்று தயாரிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டது. எனினும், பிரபல்யப்படுத்து வதற்காக எதிபார்க்கப்பட்ட இலக்குகள், சமூக மற்றும் பொருளாதார காரணிகளினால் முகம்கொடுக்கப்படுகின்ற தடைகள் காரணமாக அடைய முடியவில்லை.***

(இ) 2007 மற்றும் 2010 ஆண்டுகளின் 2,637,857/= ரூபா தொகையான 04 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஆராய்ச்சி செலவினமாக கணக்கிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது, கருத்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்படவில்லை. குறித்த கருத்திட்டங்கள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளதுடன், உரியமுறையில் முடிவாக்கப்படவில்லை.

***கருத்திட்டத்தினால் இலக்கு வைக்கப்பட்ட பெறுபேறுகளைச் சில நேரங்களில் அடைய முடிவதில்லை என்பதுடன், அச்சந்தாப்பங்களில், முகாமைத்துவம் அத்தகைய தொடர்ச்சியான செலவினம் வீணானது என்று கருதுகின்றவிடத்து ஒரு நிலைக்கு அப்பால் இந்தக் கருத்திட்டங்கள் தொடரப்படுவதில்லை.***

(ஈ) மின்சார விளக்குகள் இல. 2002:1231 மற்றும் 2002:1225 தொடர்பில் இலங்கை நியமங்களின் 4.5 ஆம் பந்தியின் கீழ் செயலாற்றுகைப் பரிசோதனைச் சான்றிதழைப் பெறுவதற்கு 801 மாதிரிகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2,000 மணித்தியாலங்கள் வாழ்க்கைக்காலத்தைப் பரிசோதித்ததன் பின்னர் 2 செயலாற்றுகைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

***இணங்கப்படுகின்றது. 801 விளக்குகளின் மாதிரிகள் வாழ்க்கைக் காலத்தைப் பரிசோதிப்பதற்காக மட்டுமல்ல ஏனைய ஆய்வுகூட அறிக்கைகளைப் பெறுவதற்குமாக வழங்கப்பட்டிருந்தன. எனினும்,எஸ்.எல்.எஸ்.ஐ, குறிப்பாக 2000 மணித்தியாலய வாழ்க்கைக்கால பரிசோதனைக்காக 2 அறிக்கைகளைக் கேட்டிருந்தன. அந்த 2 அறிக்கைகளில் ஒன்றே கணக்காய்வில் காணப்பட்டுள்ளது.***

(உ) தரத்தைப் பரிசோதிப்பதற்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்கு 338 இலத்திரனியல் விளக்குகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 14 இற்கு மட்டுமே செயலாற்று அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

***இணங்கப்படவில்லை.கூறப்பட்ட வேலைக் கட்டளைகள் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக பரிசோதனைக்காக வழங்கப்பட்ட விளக்குகள் என்று தெரிவிப்பது சரியானதல்ல.***

***பரிசோதனைக்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் பெறப்பட்ட அதிக எண்ணிக்கையான விளக்குகளின் காரணமாக அவை பெறப்பட்டவாறு அனைத்தும் பரிசோதிக்கப்படவில்லை. ஆகையால் அவை ஆய்கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. விளக்குகளைப் பரிசோதிப்பதற்கு தொழில்நுட்பவலர் ஒதுக்கப்ப ட்டிருந்தபோதிலும், பரிசோதனைக்காக வழங்கப்பட்ட அனைத்து விளக்குகளையும் நிறைவு செய்வது சாத்தியமற்றது.ஆகவே, முதலில் வந்ததிற்கு முதலில் சேவை என்பதன் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.***

(ஊ) மின்சார விளக்குகள் மீதான பரிசோதனை அறிக்கைகளைப் பெறுவதில் பிரதான வாடிக்கையாளரான இல்கை தரநிர்ணய நிறுவகத்தின் மாதிரிகளுக்கான விலைப்பட்டியல்களை வழங்குவதில் 4 முதல் 19 மாதம் வரையான கால அளவில் காலதாமதமாகின்றது.

***இந்த காலப் பகுதியில் நாம் பணத்தைப் பெற்றிருக்கவில்லையாகையால் விலைப்பட்டியலை வழங்குவதில் காலதாமதமாகியிருந்தது.***

(எ) ஒப்பந்த அடிப்படையில் நிலையத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட எழுதுவினைஞர் ஒருவர் 2007 ஆம் ஆண்டில் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக சேவையிலிருந்து விலக்கப்பட்டார். அந்த அலுவலரினால் தொழில் நியாயசபையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின்படி, நிலையம் அவரை விலக்கிய திகதியிலிருந்து பணிக்கு மீளவமர்த்தும் திகதி வரையான காலப்பகுதிக்கான நட்டஈடாக 587,406/= ரூபா தொகையை செலுத்தியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளரின் ஒப்பந்த காலப்பகுதி 2000 செப்ரெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து விலக்கப்பட்ட 2007 ஓகஸ்ட 20 வரை வருடாந்த அடிப்படையில் தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டிருந்தது. இது முகாமைத்துவத்தின் பலவீனத்தின் காரணமாகவல்ல, தீர்ப்பினடிப்படையில் செலுத்த வேண்டியிருந்தது என்று தவிசாளர் கணக்காய்விற்கு தெரிவித்துள்ளார்.

***இணங்கப்படுகின்றது. இந்தக் கணக்கு எழுதுவினைஞர் 2000.09.01 ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடைப்படையில் சேர்க்கப்பட்டார். ஒப்பந்த நீடிப்பு தரப்பட்ட போதெல்லாம், அவரது சேவை காலத்திற்குக் காலம் முறிவடைவது நடைமுறையிலிருந்ததுடன், இது 2007 வரை சென்றிருந்தது. அவரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று மீறல் குற்றச்சாட்டினைத் தொடர்ந்து வெளி அலுவலரொருவரினால் முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையின் முடிவாக அவர் 2007.08.02 ஆம் திகதியிலிருந்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.அதன் பின்னர், உரிய தொழில் சங்கம் மேற்கூறப்பட்ட செயற்பாட்டிற்கெதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. நீதிமன்றம் , தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் இவரது ஒப்பந்த காலத்தை நீடிக்கின்ற போது தவறாகச் செயற்பட்டிருப்பதாகத் தீர்மானித்து அவரை நிரந்தர அடிப்படையில் பின்நோக்கிய வேதனங்களுடன் மீளப் பணிக்கமர்த்துமாறு தீர்ப்பு வழங்கியிருந்தது.***

(ii) நிலையம் நிறுவனத்திற்குச் சட்ட ஆலோசனையை வழங்குவதற்காக சட்ட ஆலோசகரை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. சட்ட ஆலோசகர் கிடைக்கப் பெறுகின்றமையால் நிறுவனம் நட்டஈடு செலுத்தவேண்டியிருந்தது. 2004 ஆம் ஆண்டிலிருந்து ஆய்வாண்டு இறுதி வரை வழக்குச் செலவுகளுக்கு மேலதிகமாக சட்ட ஆலோசனைக்காக 1,179,000/= ரூபா தொகையைச் செலுத்தியிருந்தது. ஆய்வாண்டு காலத்தில் செலுத்தப்பட்ட கொடுப்பனவு 153,000/= ரூபா தொகையாக இருந்தது.

(iii)

***தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் சட்ட ஆலோசனைக்கு சட்டமாதிபதி தணைக்களத்தின் உதவியைப் பெற்றிருந்தது. தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனை என்னவெனில் ஒரே வழக்கிற்குத் தோற்றுவதற்கு ஒரே வழக்கறிஞர் கிடைக்கப்பெறாமையால் சில வழக்கள் தோல்வியில் முடிவுற்றிருந்தன. ஆகையால்,***

***மேற்கூறப்பட்ட கசப்பான அனுபவத்தைக் கவனத்திலெடுத்து பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்கள், 2004.01.01 ஆம் திகதியிலிருந்து பயனுக்குவரும் வகையில் தொழில்நுட்ப மாற்றலுக்கான ஒப்பந்தத்தை தயாரிப்பது தொடர்பிலும், நிலையத்திலுள்ள சட்டச் செயற்பாடுகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கியிருந்த அனுபவம் வாய்ந்த வழக்கறிஞருடன் உடன்பாடொன்றை எட்டுவதற்கு தீர்மானித்திருந்தது. தொடர்ந்துவருகின்ற ஆண்டிற்கு சட்ட விடயங்களைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டியதன் தோவை காரணமாக பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அனுமதியுடன், மாதாந்த உயர்தொழில் கட்டண அடிப்படையில் தொடர்ச்சியாக அவரது சேவையை நீடிக்கப்பட்டது. எனினும், பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அண்மைய தீர்மானம், 2012 ஆம் ஆண்டிலிருந்து சேவை பெறப்படுகின்ற போது மட்டுமே கொடுப்பனவுகளைச் செய்வது என்று எடுக்கப்பட்டிருந்தது.***

(ஏ) நிலையத்தின் அலுவலரொருவரினால் மீறப்பட்ட உறுதிமொழி தொடர்பில் பெறப்பட்ட 2,290,988/= ரூபா தொகை பல அழைப்பு வைப்புக்கள் மீது வைக்கப்பட்டுள்ளன. சிறந்த நன்மைகளை வழங்கக்கூடிய நிலையான வைப்புக்களில் மேலதிக பணத்தை முதலீடு செய்வதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

***இணங்கப்படுகின்றது. இந்தப் பணம், பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் 2012 ஆம் ஆண்டிலிருந்து நிலையான வைப்பாக அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக பொறுப்பு நிதியத்தில் சிறந்த நன்மைகளைப் பெறுவதற்கு முதலிடப்படும்.***

(ஐ) மானியங்கள் / கௌரவ ஒதுக்கீட்டுக் கணக்கு மீதி 2011 டிசெம்பர் 31 இல் 1,083,995/- ரூபா தொகையாக இருக்கின்றது. பொறியியலாளர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த ஆராய்சி மற்றும் அபிவிருத்தி கௌரவ/மானியங்கள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வழங்கப்படவில்லை.

**ஆராய்சி மற்றும் அபிவிருத்தி கௌரவ /மானியங்கள், கருத்திட்டங்களின் பெறுபேறுகள், வெளியீடுகளின்படி வழங்கப்படுகின்றன. கருத்திட்டம் அங்கீகரிக்கப் படுள்ள நடைமுறைகளின் படியும், ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீடுகளின் படியும் மதிப்பிடப்படுதல் வேண்டும். கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அத்தகைய நியமங்களை வெறறிகரமான கருத்திட்டங்கள் எதுவும் நிறைவேற்றியிருக்கவில்லை ஆகையால் விருதுகள் வழங்கப்படவில்லை.தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம். புத்துருவாக்கத்த திறனுடனிருக்கின்ற பொறியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நிலையில் இல்லையென்று விபரிக்கப்படுகின்றது. எனினும், இந்த நிதியமானது எமது ஆராய்ச்சி பொறியியலாளர் களினால் சனாதிபதி விருதுகளினால் பெறப்பட்ட விருதுகள், தேசிய விஞ்ஞான ஆதார மன்றத்தினால் வழங்கப்பட விருதுகள், தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட விருதுகள் மற்றும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவினல் வழங்கயப்பட்ட விருதுகள் மூலம் பெறப்பட்ட பணத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. ஆகவே, அத்தகைய பணத்தை விருதினை வெற்றி கொண்ட பொறியியலாளர்களுக்கு மீளளிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

(ஒ) சேவை நாடுநரினால் சேலுத்தப்படாத நிறுத்திவைத்தல் வரி 5,555/= ரூபா தொகை நிலையத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.

***சேவை நாடுநரினால் செலுத்தப்படாத நிறுத்தி வைத்தல் வரி முகாமைத்துவத்தின் அனுமதியுடன் கருத்திட்டச் செலவினமாக எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.***

## 4.3 <u>இனங்காணப்பட்ட நட்டங்கள்</u>

(அ) நிருவாகத்தினால் செய்யப்பட்ட தவறொன்றிற்காக நிறுவனத்திற்கெதிராக நிறுவனத்திலிருக்கின்ற பணியாளரொருவர் வழக்குத் தாக்கல் செய்திருந்ததுடன், அந்தப் பணியாளருக்கு நட்டஈடாக ஆய்வாண்டு காலப்பகுதியில் 587,406/= ரூபா செலுத்தவேண்டியிருந்தது. இது தொடர்பான பொறுப்பிலிருக்கின்ற அலுவலர் மீது பொறுப்பினைச் சுமத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

***இணங்கப்படவில்லை. இது முகாமைத்துவத்தின் தவறல்ல என்பதுடன் இல.4.2 (எ) (i) என்ற விடயத்தின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.***

(ஆ) ஆய்வாண்டு காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்ட வாணிபக் கருத்திட்டங்களின் பரிசோதனையானது, 07 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதில் நிலையத்திற்கு 440,165/= ரூபா நட்டம் ஏற்பட்டதாக வெளிப்படுத்தியிருந்தது. கருத்திட்டங்களின் வருமானத்திலும் பார்க்க செலவினங்கள் அதிகரித்திருந்தமையை ஏற்படுத்தியிருந்தது

***இணங்கப்படுகின்றது. முன்மொழிவினைச் சமர்ப்பிக்கின்றபோது எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிகளவான பணியாளர்களை ஒதுக்கியதன் காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும்,***

***வேலையை மேற்பார்வை செய்வதற்கான மேற்பார்வையாளர்கள் இன்மையினால் பணியாளர்களின் செயற்றிறன் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. இதனை உணர்ந்து, மேற்பார்வையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.***

(இ) 2006 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்/30 இன் கீழ் வேதன மாற்றங்களின்படி மாற்றப்பட்ட வேதனங்களின் கொடுப்பனவில் மேலதிக கொடுப்பனவாகச் செய்யப்பட்டுள்ள 57,176/= ரூபா தவணை முறையில் மீள அறவிடப்படும் என்று தவிசாளர் அறிவித்துள்ளார்.

***2014,57,176/= ரூபாவை அறவிடும் தீர்மானம் முகாமைத்துவத்தின் தீர்மானமென்பதுடன், தவணை முறையில் திரும்பப் பெறுவதால் 2014 ஆம் ஆண்டு வரைக்கும் நீடிக்கக்கூடும்.***

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கோப்பாயில் 'விதாதா' நிலையத்தைத் நிருமாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப,ஆராய்ச்சி அமைச்சுடன் 5,370,965/= ரூபா பெறுமதியான ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டிருந்தது. இந்தக் கருத்திட்டம் தொடர்பில் 448,343/= ரூபா செலவுறப்பட்டதன் பின்னர் நிருமாண வேலை கைவிடப்பட்டது.

***தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சினால் கோப்பாய் மற்றும் கரவெட்டியில் "விதாதா"கட்டடங்களை நிருமாணிப்பதற்கு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டிருந்தது. எனினும், நிருமாணத்திற்கான தளங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு செய்யப்பட்ட ஆரம்ப விஜயத்தில் கோப்பாய் மாவட்டச் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவி, உடன்பாடு என்பன போதாமல் இருந்திருந்தது. இது, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதுடன், கோப்பாயில் "விதாதா"கட்டடத்தை நிருமாணிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்த விஜயத்தின் போது செய்யப்பட்ட ஆரம்ப வேலைக்கான மதிப்பீட்டுச் செலவு இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, உற்பத்தி செய்யப்பட்ட சீமெந்து கட்டிகள் ஏனைய எதிர்காலக் கருத்திட்டங்களுக்கு பயன்படுத்தக்கூடியவை என்பதுடன்,உரிய செலவு உரிய கருத்திட்டங்களுக்கு வரவு வைக்கப்படும்.***

(ஆ) ஆய்வாண்டு காலப்பகுதியில் நிலையத்திற்கு முறைமைச் சான்றிதழை (ISO-9001) அறிமுகப்படுத்துவதற்கு 110,100/= ரூபா செலவில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்ட போதிலும், சான்றிதழ் ISO-9001 பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அந்தச் செலவினம் சிக்கனமற்ற செலவினமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

***இணங்கப்படவில்லை. இந்தப் பயிற்சி சிக்கனமற்றது என்று குறிப்பிடுவது சரியானதல்ல. இந்தப் பயிற்சி, தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் ஐ.எஸ்.ஓ முறையியலை நடைமுறைப்படுத்துவதனைத் தாபிப்பதற்கான ஆரம்பப் படிமுறை யொன்றாகச் செய்யப்பட்டிருந்தது.***

(இ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டில் ரூபா செலவில் 14 கருத்திட்டங்கள் மீதான வேலை ஆரம்பிக்கப்பட்டு ஆய்வாண்டு காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்ட போதிலும், கருத்திட்டங்கள் மீதான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த கருத்திட்டங்களிலிருந்து வெற்றிகரமான பெறுபேறுகள் அடையப்பெறவில்லை என்பதுடன், அந்த வெற்றியடையாத கருத்திட்டங்களைப் புதிய கருத்திட்டங்களாக மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.இது, பொருத்தமற்ற செயற்பாடாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

***எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்டத்தின் பெறுபேறுகள் அடையப்பெறாத சந்தர்ப்பத்தில் கருத்திட்டம் சிக்கனமற்றது என்று தெரிவிப்பது நியாயமற்றது.ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் ஒவ்வொரு நிலையிலிருந்து பதவியினரால் பெறப்பட்ட அறிவு நிலையத்தின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு முதலீடொன்றாக இருக்குமென்று சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.***

***காட்டயாமானதல்ல. எனினும், சில ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் நிறைவில் ஆராய்ச்சி அறிக்கையொன்று குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருக்கின்றது. சில ஆராய்ச்சிப் பொறியியலாளர்கள் நிலையத்திலிருந்து விலகியிருந்தமையினால் அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.எனினும், இந்த நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு முறையியல் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.***

## 4.5 கைவிடப்பட்ட இயலளவிலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள்

2011 டிசெம்பர் 31 இல் பொதுக் கையிருப்புகளில் 5,815,981/= ரூபா பெறுமதியான 40 விகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அசையா கையிருப்புகள் மற்றும் 320,285/= ரூபா பெறுமதியான சேதமடைந்த கையிருப்புகள் களஞ்சியங்களில் 07 வருடங்களை விஞ்சியும் கைவிடப்பட்ட நிலையிலிருக்கின்றது.

***காலத்திற்குக் காலம் உரிய ஆராய்ச்சிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிலிருந்து அசையா கையிருப்புக்கள் உருவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கணக்காய்வினால் அடையாளங்காணப்பட்ட பெறுமதிகள் கொள்வனவு செய்யப்படுகையில் விலைப்பட்டியலின் பெறுமதிகளாகும். எனினும், மொத்த அசையா கையிருப்புக்களையும், எதிர்கால ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய ஏதேனும் அசையா பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்குப் பகுத்தராய்ந்ததன் பின்னர் பழைய பொருட்களை அகற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.***

## 4.6 ஏனைய அரச நிறுவனங்களுக்கு நிறுவனத்தின் வளங்களை விடுவித்தல்

(அ). கரவெட்டிப் பிரதேசத்தில் 'விதாதா' நிலையத்தை நிருமாணிப்பதற்காக தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சிற்காக தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தொழில் மற்றும் மேந்தலைச் செலவினத்தைப் பயன்படுத்துவதற்கு இணங்கப்பட்டதுடன், மதிப்பிடப்பட்ட செலவினம் 3,194,626/= ரூபா தொகையாக இருந்தது. உண்மையாக உறப்பட்ட செலவு 930,450/= ரூபாவாக இருக்கையில், அலுவலர்களினதும், தொழிலாளர்களின தும் பயணச் செலவு மற்றும் பிழைப்பூதிய படிகளுக்கான மதிப்பீடு 1,957,358/= ரூபா தொகையாக இருந்ததுடன், மதிப்பிடப்பட்ட தொகையின் 100 வீதத்தின் அதிகரிப்பாக காணப்பட்டது.

***இந்தக் கட்டடத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவு 7.9 மில்லியனாகும்.ஐ.சி.ரிஎ.டி.யின் நியமங்களின்படி, அத்தகைய கட்டடத்தை நிருமாணிப்பதற்கான காலப்பகுதி 6 மாதங்களாகும். ( ஐ.சி.ரிஎ.டி.யின் பெறுகை வழிகாட்டல் தொடர் இல.4.2.2) இந்த நிருமாணக் கருத்திட்டத்தினை 2011 சனவரி மாதம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ள போதிலும், வடக்கு மாவட்டத்தில் கடும் மழை,வெள்ளம்,மாகாணச் சபைத் தேர்தல்கள் மற்றும் சிங்கள, இந்து புதுவருடம் கொண்டாட்டங்கள் காரணமாக வேலைகளை ஆரம்பிப்பது 2011 ஏப்பிரல் 16 ஆம் திகதி வரை காலதாமதமாகியிருந்தது.இதன்படி, 6 மாதங்களாக கட்டட நிருமாணம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 31/2 மாத குறுகிய காலத்திற்குள் நிறைவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆகவே, கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு மேலதிக பணியாளர்களைக் கொண்டு இரவு நேரங்களில் வேலை செய்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, பயணச் செலவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கு பணம் அதிகரித்தமை மதிப்பிடப்பட்டதிலும் பார்க்க அதிகமாக செலவுற வேண்டியிருந்தது.***

(ஆ) அமைச்சுடன் செய்யப்பட்ட உடன்பாடு தேசிய எந்திரவியல் அராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகத்தினால் உறப்படவுள்ள செலவினங்களை உள்ளடக்கியிருக்க வில்லை.

***(ஆ) தேசிய எந்திரவியல் அராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகத்திற்கு அமைச்சினால் செலுத்தப்படவுள்ள பணத்திற்காக அமைச்சினால் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. ஆகவே, நிலையத்தினால் உறப்பட்ட செலவினம் உடன்படிக்கையில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.***

## 4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

நிலையத்தின் பிரதான குறிக்கோள், பொறியியல் ஆராய்ச்சி என்கின்றபோதிலும், அந்தச் செயற்பாட்டைப் புரிவதற்கான அங்கீகரிக்கப்பட்ட 38 பதவிகள் வெற்றிடமாக இருக்கின்றன.

| பதவி | | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உண்மையா ன பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| ----- | | ------------ | -------- | ------------ |
| ஆய்வு செய்கின்ற மாணவர்கள் | | 05 | 03 | 02 |
| பிரதம ஆய்வுப் பொறியியலாளர்கள் | | 13 | 08 | 05 |
| சிரேஷ்டஆராய்ச்சி பொறியியலாளர்கள் | | 16 | 01 | 15 |
| ஆராய்ச்சி பொறியியலாளர்கள் | | 21 | 15 | 06 |
| மேலதிகாரி | - தொழில்நுட்பப் பதவிகள் | 01 | -- | 01 |
| | - அரும்பொருளகம் | 01 | -- | 01 |
| | - பராமரிப்பு | 01 | - | 01 |
| | - தொழிற்சாலை | 01 | - | 01 |
| தொழில்நுட்ப அலுவலர்கள் | | 05 | 02 | 03 |
| தொழில்நுணுக்க உதவியாளர்கள் | | 15 | 12 | 03 |

***நிலையம் தேவையான ஆய்வு பொறியியலாளர் பதவியினர் மற்றும் தொழில்நுணுக்க அலுவலரை ஆட்சேர்ப்புச் செயவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருந்த போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. பல்கலைக்கழகங்களிலிருந்து இறுதியாண்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டவுடன் தேசிய எந்திரவியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திலுள்ள பொறியியலாளர் பதவி வெற்றிடங்களுக்கு விளம்பரப்படுத்துவது கடந்த கால அனுபவமாக இருந்தது. கடந்த 2011 ஆம் ஆண்டிலும்கூட ஆராய்ச்சிப் பொறியியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஒத்த ஒழுங்குகளே கடைப்பிடிக்கப்பட்டிருந்தன. எனினும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 11 பொறியியலாளர்களில் 4 பேர் அவர்களின் நலனுக்காக நிலையத்திலிருந்து விலகியிருந்தனர். அதேபோன்று, சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. ஆராய்ச்சி பொறியியலாளர்களுக்கும், சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியிலாளர்களுக்கும் அவர்களது தகைமைக்கு ஈடற்ற குறைந்த வேதனம் வழங்கப்படுதலே அவர்கள் நிலைத்திருக்காமைக்கான பிரதான காரணமென்பதை நாம் அவதானித்துள்ளோம். மேலும், நிலையத்தின் அமைவிடம் கொழும்பிலிருந்து தொலைவில் அமைந்திருக்கின்றமை பிறிதொரு காரணமாகும்.***

***இந்த காலகட்டத்தில் நிலையத்துடன் மிகவும் தொடர்புபட்ட சிவில் எந்திரவியல், இலத்திரனியல் எந்திரவியல் போன்ற அத்தகைய பதவிகளுகு விண்ணப்பிக்கின்ற பொறியியலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக அல்லது இல்லையென்பது அவதானிக்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிவில் எந்திவையலுக்கு ஒரு (01) பொறியியலாளர் மட்டுமே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். அவரும்கூட அந்த வருடத்திலேயே இராஜினாமாச் செய்திருந்தார்.மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர் துறையில் மூன்று பொறியியலாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அவர்களில் இரண்டு (02) பேர் ஏற்கனவே நிலையத்திலிருந்து விலகியிருந்தனர்.மேலுள்ள காரணங்களின் காரணமாக, இந்த பொறியியல் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் எம்மால் முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. மேலும், தற்போதிருக்கின்ற நடுத்தர பதவியினரின் 15 வெற்றிடங்களுக்கு சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாததன் காரணமாக, இளம் பொறியியலாளருக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியைச் செய்வதற்கு மிகவும் தேவையான வழிகாட்டலாக நாம் காண்கின்றோம்.இதுவும் நிலையத்தில் புதிய பொறியியலாளர்களை நிலைத்திருக்கச் செய்வதற்கு முடியாமல் போவதற்கான காரணங்களுள் ஒன்றாகும்.ஆராய்ச்சி பொறியியலாளர்களைஆட்சேர்ப்புச் செய்முடியாமலும்,நிலையாக வைத்திருக்கமுடியாமல் போவதற்கு மான மேலுள்ளகாரணங்கள் எம்மால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைப் பாதிக்கின்றது.***

# 5 கணக்கீடு மற்றும் நல்லாட்சி

## 5.1 அகக் கணக்காய்வு

(a) 2009 யூன் 09 ஆம் திகதியிடப்பட்ட டி.எம்.எ/2009 (i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின்படி, தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டம், வருடாந்த மதிப்பீடுகள், செயற்றிட்டம் மற்றும் வரவுசெலவுத் திட்ட உத்தேசங்கள் போன்ற அத்தகைய அனைத்து விடயப் பரப்புகளின் செயற்பாடுகளையும் உள்ளடக்க வேண்டும், ஆனால், அது அவ்வாறு தயரிக்கப்பட்டிருக்கவில்லை.

***இணங்கப்படுகின்றது. வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் தயாரிப்பில் மொத்த செயற்றிட்டத்தை முழுவதுமாக நாம் எடுத்திருந்த போதும் திட்டத்தில் குறித்த விகிதமோ அல்லது ஏதேனும் தெரிவு செய்யப்பட்ட விடயங்களோ இருக்கவில்லை. வரவு செலவுத்திட்ட உத்தேசங்கள் -2011 விதப்புரைகள் கணக்கிற்குள் எடுக்கப்படவில்லை. அடுத்த ஆண்டு கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுகின்றபோது நாம் கவனமெடுப்போம்.***

(b) மேலேயுள்ள சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின்படி, நிதிக் கணக்காய்விற்கு மேலதிகமாக அகக் கணக்காய்வு நிறுவனத்தினால் பயனுறுவாய்ந்த செயலாற்றுகையை உறுதிப்படுத்தும் நோக்கில் முறைமை பகுப்பாய்வு, செயலாற்றுகை பகுப்பாய்வு மற்றும் விசேட விசாரணைகள் மீது விசேட கவனம் செலுத்துதல்வேண்டும்.

***இணங்கப்படுகின்றது. நிதிக் கணக்காய்விற்கு மேலதிகமாக, இந்த ஆண்டிலிருந்து, முறைமை கணக்காய்வுகள், செயலாற்றுகைக் கணக்காய்வுகள், மற்றும் விசேட விசாரணைகள் மீது நாம் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.***

## 5.2 அகக் கட்டுப்பாடு

தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் ELE/COM/59/11 ஆம் இலக்கக் கருத்திட்டத்தின் கீழ், இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன பற்றறி மாதிரிகளைப் பெறுதல், விலைப்பட்டியலிடல், அறிக்கைகளைத் தயாரிப்பினைப் பரிசீலித்தல், அறிக்கைகளை வழங்குதல் மற்றும் திரும்பிய மாதிரிகள் போன்ற அத்தகைய அனைத்துச் செயற்பாடு களும் அலுவலரொருவரினால் செய்யப்பட்டிருந்தன. ஆகையால், ஆகக்கூடியவிற்கு வருமானத்தைப் பெறுவதற்கும்,ஏதேனும் சாத்தியமான பிழைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

***இணங்கப்படுகின்றது.பற்றறிப் பரிசீலனைக்கு குறித்த பயிற்சியளிக்கப்பட்ட பதவியினர் எம்மிடமுள்ளனர் பற்றறிப் பரிசீலனை செய்முறை தனியொருவரினால் நீண்ட காலம் செய்யப்படவில்லை.***

***அதேபோன்று, பற்றறிப் பரிசீலனை செயன்முறையில் தவறுகளைக் குறைப்பதற்கு செயன்முறை இருக்கின்றது.மேலும், அனுமதியளிக்கப்பட்ட மேற்பார்வைப் பொறிமுறையொன்றின் பின்னர் மட்டுமே அறிக்கைகள் விடுவிக்கப்படுகின்றன. எனினும், இந்தக் காலப்பகுதியில், இந்தத் திணைக்களத்தில் திணைக்களத் தலைவர் மட்டுமே பொறியியலாளர் இருந்தமையால், இச்செயற்பாடுகள் திணைக்களத் தலைவரினால் செய்யப்பட்டிருந்தன. தற்போது, இந்த குறித்த வேலைக்காக பிறிதொரு தொழில்நுட்ப அலுவலர் குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றார்.***

## 5.3 <u>கணக்காய்வு, முகாமைத்துவக் குழு</u>

(h) 2003 யூன் 2 ஆம் திகதியிடப்பட்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை பி.இ.டி./12 ஆம் இலக்க 7.4.1 ஆம் பிரிவின் நியதிகளின்படி கணக்காய்வுக் குழு 03 மாதங்களிற் கொருமுறை கூடவேண்டியிருந்த போதிலும், கணக்காய்வாண்டு காலப்பகுதியில் 03 கூட்டங்கள் மட்டுமே கூட்டப்பட்டிருந்தன.

***இணங்கப்படுகின்றது. இந்த ஆண்டிலிருந்து 2003 யூன் 2 ஆம் திகதியிடப்பட்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை பி.இ.டி./12 ஆம் இலக்க 7.4.1 ஆம் வாக்கியத்துடன் நாம் இணங்குதல் வேண்டும்.***

(ii) 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்திக்கமைவாக, கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதிச் சேவையைப் பெறுவது அவசியமானதாகும். அன்றேல், அத்தகைய பிரதிநிதிகள் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை.

***தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2010 டிசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பீ.இ.டி சுற்றறிக்கையின் 5 ஆம் வாக்கியத்தின்படி அவதானிப்பாளராக பங்குபற்றுவதற்கு தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் அகக் கணக்காய்வுச் சேவைகளைப் பெற்றிருந்தது.***

பொறி.டி.டி.ஆனந்த நாமல்

**பணிப்பாளர் அதிபதி**

பொறி.டி.ஆர்.புள்ளப்பெரும

**தவிசாளர்**